வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu
ඊළනාඩු

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk
மலர் : 03
02.02.2022 சனிக்கிழமை
இதழ் : 118
பக்கங்கள் : 16

## அடிப்படைவாத குழு ஒன்றே வன்முறைகளை தூண்டியது!

### அரபு வசந்தத்தை ஏற்படுத்தவும் முயற்சி ஜனாதிபதி ஊடகப் பிரிவு விளக்கம்

கொழும்பு, நவ. 02
நுகேகொடை - ஜனாதிபதி இல்லத் துக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த குழுவினருக்கு இடையில் ஒழுங்கமைக்கப்பட்ட அடிப்படைவாதிகள் குழுவொன்று வன்முறைச் சூழலை ஏற்படுத்தியமை தெரியவந்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்றுக் காலை விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.
இலங்கையி

15

## கூட்டமைப்பில் அங்கம் வகிக்க சுமந்திரனுக்கு தகுதி உள்ளதா?

### கேள்வி எழுப்புகின்றார் செல்வம் எ.பி.

மன்னார், ஏப். 02
விடுதலைப் புலிகளின் ஆசீர்வாதத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியவர்கள் நாமே. விடுதலைப் புலிகளை வன்முறையாளர்கள் போல காட்டிக் கொள்ளும் சுமந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தகுதியுள்ளதா என கேள்வியெழுப்பியுள்ளார் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன்.
நேற்று முன்தினம் வவுனியாவில் நடந்த நிகழ்வொன்றின்

15



ஜனாதிபதியின் இல்லம் முற்றுகை;

## ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற 54 பேர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஏப். 02
மிரிஹானவில் ஜனாதிபதியின் இல்லத்துக்கு அருகில் ஜனாதிபதியை பதவி விலகக் கோரி நேற்று முன்தினம் இரவு நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற ஒரு பெண் உட்பட 54 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
பொருளாதார நெருக்கடியால் சீற்றமடைந்த மக்கள் சுயமாக அரசுக்கு எதிராகத் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், அவர் களை அடக்க பொலி

15

## கொழும்பு முழுவதும் பாதுகாப்பு உச்சம்!

- ஆர்ப்பாட்டங்கள் ஆங்காங்கே தொடர்கின்றன
- களுத்துறைக்கும் பரவின போராட்டங்கள்!
- 3மேல் மாகாணம் முழுவதும் ஊரடங்கு அமுல்!
- 39 மில்லியன் ரூபாய் சொத்துக்கள் சேதம்!

கொழும்பு, ஏப்ரல் 02
நாட்டில் நிலவும் நெருக்கடிகளுக்கு தீர்வு காண வலியுறுத்தி நேற்று முன்தினம் இரவு கொழும்பு - மிரிஹான பகுதியில் போராட்டங்கள் வெடித்திருந்தன. இதையடுத்து கொழும்பு முழுவதும் உச்சக்கட்ட பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனினும், நேற்றும் ஆங்காங்கே போராட்டங்கள் இடம்பெற்றன.

15

## அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தப்பட்டது!

கொழும்பு, ஏப். 02
நாட்டில் அவசரகால நிலைமையை பிரகடனப் படுத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.
நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகை

15

யாழ். போராட்டத்தை குழப்ப சதி

## அரச ஆதரவாளர் அருண் அடித்து விரட்டப்பட்டார்!

யாழ்ப்பாணம், ஏப். 02
ஐக்கிய மக்கள் சக்தியினர் யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் முன்பாக நடத்திய போராட்டத்தில் புகுந்து குழப்பம் ஏற்படுத்த முயன்ற அரச ஆதரவாளராக அறியப்பட்ட அருண் சித்தார்த் அந்தக்

15

## அமைச்சர்களின் வீடுகளுக்கு கடும் இராணுவப் பாதுகாப்பு!

### கொழும்பில் தொடர்கிறது பதற்றம்

கொழும்பு, ஏப். 02
ஜனாதிபதியின் இல்லத்தை முற்றுகையிடும் போராட்டம் மிரிஹானவில் நேற்று முன்தினம் ஆரம்பமானது அடுத்து முக்கிய அமைச்சர்களின் வீடுகளுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹான வீட்டின் முன்பாக நேற்றுமுன்தினம் இரவு பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

15



## பல்கலைக்கழக மாணவர்கள் நுகேகொடையில் போராட்டம்!

கொழும்பு, ஏப். 02
அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல நூறு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றிரவு வெள்ளிக் கிழமை இரவு போராட்டத்தில் குதித்தனர்.
நுகேகொடை - விஜயராமை சந்தியில் கூடிய மாணவர்கள் கைகளில் தீப்பந்தங்களை ஏந்திப் போராட்டங்களில் ஈடுபட்டனர்.
நேற்று முன்தினம் ஆரம்பமான மிரிஹான போராட்டத்தின் தொடர்ச்சியாகவே நேற்று இந்தப் போராட்டமும் ஆரம்பமாகியிருந்தது. (ஐ)

## இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்வாருங்கள்!

### 11 கட்சிகளின் கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு அழைப்பு

கொழும்பு, ஏப். 02
நாடு எதிர்கொள்ளும் பிரச்னைகளை எதிர் கொள்ள இடைக்கால அரசாங்கத்தை அமைக்க முன்வருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

15

## நாளைய பேரணியில் அனைவரும் திரள்க!

### விக்னேஸ்வரன் எம். பி. அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 02
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பேருந்து தரிப்பிடம் முன்பாக முன்னெடுக்கும் கண்டன பேரணிக்கு தமிழ் மக்கள் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் ஆதரவு தெரிவித்துள்ளார்.

15

## அமைச்சுப் பதவிகளை உதறுகிறது சுதந்திர கட்சி!

கொழும்பு, ஏப். 02
அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகி சுயாதீனமாக செயல்படுவதற்கு ஆளும் கட்சியின் பங்காளிக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்துள்ளது.
இந்த முடிவு

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது…!

தமிழகத்தின் தலைநகர் சென்னையில் இரண்டாயிரத்து பதினேழாம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சென்னை மெரினா கடற்கரை, மாணவர்கள் முற்றுகையால் திக்குமுக்காடிப்போனது நினைவிருக்கலாம்.

தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான ஜல்லிக்கட்டுக்கு மத்திய அரசு தடைவிதித்ததைத்தொடந்து மாணவர்கள் தன்னெழுச்சியாக மெரினாவில் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

யார் அந்த போராட்டத்தை ஆரம்பித்தது என்பது இன்றுவரை யாருக்கும் தெரியாத ஒன்று. ஆனால், ஒருசில மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில், சாரிசாரியாக மாணவர்கள் மாத்திரமன்றி. ஜல்லிக்கட்டுக்கு ஆதரவானவர்களும் மெரினாவில் கூடத் தொடங்கினர். அவ்வாறு மக்கள் முற்றுகையிடத் தொடங்கியபோது, அந்தப் போராட்டத்தை வழிநடத்த அவர்களிலிருந்து சிலர் முன்வந்தனரே தவிர, அவர்களே அந்தப் போராட்டத்தை ஆரம்பித்தவர்கள் என்பதல்ல.

கடைசியில் அந்தப் போராட்டத்தில் லட்சக்கணக்கானவர்கள் திரண்டு, நீண்டநாட்கள் போராட்டம் நடந்ததால், அதற்கு ஆதரவாக தமிழகம் முழுவதும் ஆங்காங்கே மாணவர்கள் போராட்டங்களை ஆரம்பிக்க, முழுத் தமிழகமும் போராட்டங்களால் கொந்தளித்துப்போனது.

கடைசியில் மத்திய அரசு இறங்கிவரவேண்டி வந்ததும், ஜல்லிக்கட்டுக்கு அனுமதி வழங்கியதும்தான் இப்போது ஞாபகத்திற்கு வந்தது.

நேற்று முன்தினம் இரவு கொழும்பில் மிரிஹான பகுதியில் திடீரென்று ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டக்காரர்களால் அந்தப் பகுதி போர்க்களமான செய்தியை வாசகர்கள் படித்திருப்பீர்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட வாசஸ்தலம் அமைந்திருக்கும் அந்த மிரிஹான பகுதியையே ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவுசெய்து, இரவு எட்டுமணியளவில் திடீரென்று முற்றுகையிடத் தொடங்கியிருந்தனர்.

நாட்டில் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட பின்னரும் தனது சொந்த வீட்டிலேயே வசித்துவருகின்ற ஜனாதிபதி என்ற அடைமொழியுடன் இருக்கும் அவரின் வீடு ஒரு சிறிய வீதி ஒன்றிலேயே இருக்கின்றது. அதனால் அந்தப் பகுதியில் சிறிய மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்துவதுகூட பிரச்னைக்குரியது.

இதனால்தானோ என்னவோ ஆர்ப்பாட்டக்காரர்களும் அவரது இல்லத்தை தெரிவுசெய்திருக்கலாம். கடைசியில் இராணுவம், அதிரடிப்படை என்று பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசப்பட்டும், தண்ணீர் பீச்சியும் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க முயன்றபோதிலும் அது முழுமையாக சாத்தியமாகாத நிலையில் ஊரடங்கு பிறப்பிக்கப்படவேண்டியதாயிற்று. இதுபோன்ற போராட்டங்கள் இனி தினமும் நடக்கலாம்.

கடந்த நல்லாட்சி அரசு செய்துவந்த தவறுகளால், குறிப்பாக ஜனாதிபதி ஒரு கட்சியிலிருந்தும் பாராளுமன்றம் இன்னொரு கட்சியின் கீழும் இருந்ததால் நாட்டை நிர்வகிப்பதில் ஏற்பட்ட பிரச்னைகளால் நாடு நெருக்கடிக்குள் சென்றபோது, அதனை மீட்டெடுக்க ராஜபக்ஷக்களால்தான் முடியும் என்று பெரும்பான்மை சிங்கள மக்கள் நம்பினார்கள். அதுமாத்திரமன்றி, சிறுபான்மை மக்களின் ஆதரவு தமக்கு கிடைக்காது என்று தெரிந்துகொண்டதால் இனவாத அரசியலை தீவிரப்படுத்தி, அதனை அறுவடை செய்துகொண்டு ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சியைப் பிடித்தனர்.

தனியொரு கட்சியாக, மூன்றில் இரண்டு பலத்துடன் பதவிக்கு வந்தவர்கள், முதலில் செய்தது பத்தொன்பதாவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் இழந்துபோன ஜனாதிபதிக்கான அதிகாரங்களை இருபதாவது திருத்தத்தின் மூலம் மீண்டும் நிலைநாட்டியதுதான்.

அதனையும்கூட, தென்னிலங்கை மக்கள் சாதகமாகவே பார்த்தார்கள். கோட்டாபய என்ற தனி மனிதன், யுத்தத்தை வழிநடத்தி வெற்றிபெற்றதுபோல, நாட்டையும் வழிநடத்திச் சென்று சாதனைகளைப் படைப்பார் என்றே பார்த்தார்கள்.

ஆனால், மக்களின் நம்பிக்கை தகர்ந்துபோனதற்கு பல காரணங்களை கண்டுபிடிக்கலாம். சர்வகட்சி மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க சொன்னதுபோல, அதற்கான காரணங்களை கண்டறிய புறப்பட்டால் அது விஜயன் வந்தது தவறா என்றெல்லாம் ஆராயவேண்டியதாகிவிடும்.

அதுவல்ல இன்றைய தேவை. ஆனால், இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க என்ன செய்யவேண்டும் என்று யாரும் இதுவரை கூறியதாக தெரியவில்லை. நாட்டை காப்பாற்றக் கூடியவர்கள் என்று இன்று பலரும் கைகளைக் காட்டும் ரணில்கூட சர்வதேச நாணய நிதியத்தை நாடவேண்டும் என்று சொன்னாரே தவிர, வேறு மார்க்கம் என்னவென்று சொல்லவில்லை. அவரது யோசனையை ஏற்றே அரசு சர்வதேச நணய நிதியத்தின் கதவுகளையும் தட்டியிருக்கின்றது.

இந்த அரசு வீட்டுக்குப்போகவேண்டிய அரசுதான் என்றாலும், அது போனபின்னர் வருகின்றவர் எப்படி இந்த நாட்டை அதலபாதாளத்திலிருந்து மீட்டுவருவார் என்பதற்கும் யாரிடமும் பதில் இருப்பதாக தெரியவில்லை.

ஜனாதிபதியையோ அந்த அரசையோ தூக்கி எறிவதற்கு முதல், யாரிடம் நாட்டைக் கொடுக்கப்போகின்றோம் என்பது இன்றுவரை தெரியவில்லை.

மீட்பர் ஒருவரை முதலில் இனம்கண்டுகொள்ளவேண்டும். அதுவே இப்போது அவசரமானது!

**- ஊர்க்குருவி**







நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானபோது…!

# இன்று எட்டரை மணிநேரம் மின்வெட்டு நடைமுறையாகும்!

கொழும்பு, ஏப். 02

இன்று சனிக்கிழமை எட்டரை மணித்தியாலங்களுக்கு நாடு முழுவதும் மின் துண்டிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஏ, பி, சி, டி, ஈ, எவ். ஆகிய வலயங்களுக்கு காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை 4 மணித்தியாலங்களும், பிற்பகல் 4 மணி முதல் இரவு 7 மணிவரை 3 மணித்தியாலங்களும், இரவு 9 மணிமுதல் இரவு 10.30 வரை ஒன்றரை மணித்தியால மும் மின்வெட்டு அமுலாக வுள்ளது.

ஜி, எச், ஐ. ஜே, கே, எல் ஆகிய வலயங்களில் நண்பகல் 12 முதல் பிற்பகல் 4 மணி வரை 4 மணித்தியாலங்களும், மாலை 6 மணிமுதல் இரவு 9 மணிவரை 3 மணித்தியாலங்களும், இரவு 10.30 முதல் நள்ளிரவு 12 மணி வரை ஒன்றரை மணித்தியாலங்களும் மின்துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளது.

பி, கியூ, ஆர், எஸ் ஆகிய வலயங்களுக்கு காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை 4 மணித்தியாலங்களும் பிற்பகல் 4 மணிமுதல் இரவு 7 மணிவரை 3 மணித்தியாலங்களும், இரவு 9 மணி முதல் நள்ளிரவு 10.30 வரை ஒன்றரை மணித்தியாலங்களும் மின்வெட்டு அமுலாக்கப்படவுள்ளது.

ரி, யூ, வி, டபிள்யூ ஆகிய வலயங்களுக்கு நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும், மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணி வரையும், பின்னர் இரவு 10.30 முதல் நள்ளிரவு 12 மணிவரையும் மின்வெட்டு நடைமுறையாகும்.

M, N, O, X, Y, Z ஆகிய வலயங்களுக்கு அதிகாலை 5.30 முதல் காலை 9 மணி வரை மூன்றரை மணித்தியாலங்களும் மின்வெட்டு அமுலாகவுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# பனை சார் உற்பத்தியாளருக்கு உபகரணங்கள் அன்பளிப்பு!

வவுனியா, ஏப். 02

பனை சார் உற்பத்தியாளர்களுக்கான உபகரணங்கள் அமைச்சரால் வழங்கி வைக்கப்பட்டது.

பெருந்தோட்ட அமைச்சு தென்னை, கித்துள், பனை மற்றும் இறப்பர் செய்கை மேம்பாடு மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தப்படல் இராஜாங்க அமைச்சின் 2021ஆம் ஆண்டு வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பனைசார் உற்பத்தியாளர்களிற்கான உபகரணம் வழங்கும் நிகழ்வு நேற்று வவுனியா மாவட்ட செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் அருந்திக பர்ணாந்து, வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன், உதவி அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், பனை அபிவிருத்தி சபையின் தலைவர் கிருஷாந்த பத்திராஜா திணைக்களத்தின் பொது முகாமையாளர் லோகநாதன், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி இந்திரா சுபசிங்க மற்றும் பயணாளிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது பனை சார் உற்பத்தியாளர்களிற்கான உபகரணங்கள் அமைச்சரால் வழங்கிவைக்கப்பட்டது. (ஐ)

# கொரோனாவுக்கு மேலும் இருவர்பலி!

கொழும்பு, ஏப். 02

நாட்டில் நேற்று முன்தினம் கொரோனா தொற்றால் மேலும் 2 பேர் உயிரிழந்தனரென அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 2 ஆண்கள் உயிரிழந்தனர். இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 480 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
02.04.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பொறுப்புடன் நடந்துகொள்ளுங்கள்?

ரோம் எரிந்துகொண்டிருக்கும்போது, நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்ததாக கூறுவார்கள். பொறுப்பு வாய்ந்தவர்கள் - பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில், பொறுப் பற்று நடக்கின்றபோது, இந்த கதை நினைவுப்படுத்தப்படுவதுண்டு. தமிழ்த் தேசிய அரசியல் தலைவர்கள் என்போரின் செயல்பாடுகளுக்கும், இந்தக் கதைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இது தமிழ்த் தேசியம் பேசும் அனைத்து தலைவர்களுக்கும் பொருந்தும். ஜனாதிபதி கோட்டாபயவுடனான சந்திப்பின்போது, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ, சந்திப்பை புறக்கணித்திருந்தது.

இது தொடர்பில் தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் களில் ஒருவரான, சுமந்திரன், பொதுவெளிகளில் விமர்சித்ததாக ஒரு செய்தி வெளியாகியிருந்தது. அதாவது, ரெலோ, கூட்டமைப்பிலிருந்து வெளியேறினால் மகிழ்ச்சியடைவேன் - என்று அவர் கூறினாரெனக் குறித்த செய்தி வெளியாகியிருந்தது. இதனைத் தொடர்ந்து, அதற்கு ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பதலளித்திருக் கின்றார். அதாவது - விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு இணைந்து தாமே கூட்டமைப்பை உருவாக்கியதாகவும், போராட்டத்திலும் கூட்டமைப்பின் உருவாக்கத்திலும் துளியளவுகூட பங்களிக்காதவரே சுமந்திரன். எனவே, பிரபாகரனின் ஆசீர்வாதத்துடன் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பில், சுமந்திரன் எவ்வாறு இருக்க முடியும் என்றவாறு, செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருக்கிறாரென செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியொன்றின் முடிவு தொடர்பில், பிறிதொரு பங்காளிக் கட்சிக்கு மாற்று அபிப்பிராயங்கள் இருப்பின் - அதனை ஜனநாயக நெறிமுறைகளுக்கு அமைவாக கட்சிக்குள் விவாதிக்க வேண்டும். இது தொடர்பில் 'ஈழநாடு' பல தடவைகள் வலியுறுத்தியிருக்கின்றது. உரிமைக்காகப் போராடுவதாக கூறிக்கொள் ளும் தமிழ்த் தேசிய தரப்புக்கள், சிங்கள, முஸ்லிம் கட்சிகள் பொது மேடைகளில் மோதிக்கொள்வது போன்று நடந்துகொள்ளக்கூடாது - என்பதை 'ஈழநாடு' தொடர்ந்தும் பொறுப்புடன் சுட்டிக்காட்டி வந்திருக்கின்றது.

ரெலோவின் முடிவு விமர்சனத்துக்கு உரியதெனின், கூட்டமைப்பின் உயர்பீடத்தைக் கூட்டி, ஆராய்ந்திருக்க வேண்டும். அவ்வாறானதோர் உயர்பீடம் இல்லையெனின், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் விடயங்களைக் கையாள வேண்டும். ஆனால், கூட்டமைப்புக்குள் அவ்வாறு நடப்பதில்லை. ஒவ்வொருவரும் தங்களின் விருப்பங் களுக்கு ஏற்ப விடயங்களை பேச முற்படுவதன் காரணமாகவே, பிரச்னைகள் நீண்டு செல்கின்றன.

அடுத்தது, இது போன்ற பிரச்னைகளுக்கு பதிலளிக்கும்போது, விடுதலைப் புலிகளை தேவையில்லாமல் பயன்படுத்த முற்படுவதும் பெரிய தவறாகும். ரெலோவின் தலைமை இது தொடர்பில் ஒன்றுக்கு இரண்டு முறை சிந்தித்துப் பேச முயற்சிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் காலத்திலும் ஒரு கூட்டமைப்பு இருந்தது உண்மைதான். ஆனால், அந்த கூட்டமைப்பு உயிரிழந்து பத்து வரு டங்களுக்கு மேலாகின்றது. தேவையில்லாமல் விடுதலைப் புலி களையும் கூட்டமைப்பையும் தொடர்புடுத்தி விவாதிக்க முற்படுவது, சிங்கள கடும்போக்காளர்களுக்கு தீனி போடுவதாகவே அமையும். நாங்கள் பேசும் விடயங்கள், எங்களை எப்படியாவது சர்வதேச இராஜ தந்திர சமூகத்தினர் மத்தியிலிருந்து அந்நியப்படுத்த வேண்டுமென்று எண்ணுபவர்களுக்கு வாய்ப்பாக மாறிவிடக்கூடாது. தமிழ் தேசிய அரசியல் கட்சிகளுக்கு முன்னால் ஏராளமான பணிகள் இருக்கின்றன. ஆனால், நீங்களோ தேவையற்ற விடயங்களில் காலத்தை விரயம் செய்து கொண்டிருக்கின்றீர்கள்.

# கொந்தளிப்பில் கொழும்பு!

**அலசுவது இராஜதந்திரி**

ஒரு பொங்கல் பானை படிப்படியாக சூடேறி பின்னர் பொங்கி வழிவது போன்ற நிகழ்வே நேற்றுமுன்தினமிரவு கொழும்பு மிரிஹான பகுதியில் அமைந்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இல்லத் தின் முன்பாக பொருளாதார நெருக்கடிகளை சகித்து பின்னர் பொறுமை இழந்தவர்களாக ஆயிரக்கணக்கானோர் கொந்தளித்து நடத் திய ஆர்ப்பாட்டம் விளங்கியிருந்தது.

கடந்த ஓரிரு மாதங்களாகவே தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. சில வாரங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஆர்ப்பாட்டம் காலி முகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டிருந்தது.

ஜனாதிபதியையும் அவரது குடும்பத்தினர் மற்றும் அரசாங்கத்தில் அங்கம் வகிப்போரை தூற்றித்திட்டுவதாக அந்த ஆர்ப்பாட்டம் அமைந்திருந்தது.

இதனைத் தொடர்ந்து மற்றுமோர் ஆர்ப்பாட்டம் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மகளிர் பிரிவினரால் மிரிஹானவில் அமைந்துள்ள ஜனாதிபதியின் இல்லத்துக்கு முன்பாக நடத்தப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு சில வருடங்களுக்கு முன் னர் கொலையுண்ட அரசியல் பிரமுகரான பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் புதல்வி ஹிருணிகா பிரேமசந்திர தலைமை தாங்கியிருந்தார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் கொழும்பு கோட்டையில் அமைந்துள்ளது. இருந்தபோதிலும் அவர் மிரிஹானவில் உள்ள தமது இல்லத்திலேயே பெரிதும் தங்கியிருப்பதுண்டு. இதன் காரணமாகவே நேற்று முன்தினமிரவு ஜனாதிபதியின் மிரிஹான இல்லம் ஆயிரக் கணக்கானோரால் முற்றுகைக்குள்ளாகி யிருந்தது.

ஆர்பாட்டக்காரர்கள் பொலிஸ ாரினாலும், ஆயுதப்படையினராலும் போடப்பட்ட தடைகளையெல்லாம் உடைத்தெறிந்து ஜனாதிபதியின் இல்லத்துக் குள் புகுந்துவிடும் அளவிற்கு மூர்க்கமடைந் திருந்தனர். ஜனாதிபதியையும் அவரது சகோதரர்களையும் திட்டித்தீர்க்கும் கோஷ ங்கள் மிரிஹானவில் பலமாக ஒலித்திருந்தன.

"எமக்கு உண்ண உணவில்லை. எரிபொருட்கள் இல்லை. எமது பிள்ளை களுக்கு குடிக்க பால் மா இல்லை. ஆனால் ஜனாதிபதியே நீங்களும் உங்கள் குடும்பத்தின ரும் ஆடம்பர வாழ்க்கையில் திளைத்திருக் கிறீர்கள்" என்ற கோஷமும் "நாட்டை ஆள முடியாவிட்டால் பதவியை விட்டு வெளி யேறிவிடுங்கள்" என்ற கோஷமும் மிகப்பல மாக ஒலித்ததை அவதானிக்க முடிந்தது.

நாளுக்கு நாள் பொருளாதார ரீதியாக இருளடைந்து வரும் இலங்கையில் மின் வெட்டு நேரம் அதிகரித்துச்செல்லும் நிலை யில் பதின்மூன்று மணித்தியாலங்களாக மின் வெட்டு நேரம் மேலும் அதிகரிக்கப்படு மெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மின்சாரத்தால் இயங்கும் தொலைபேசி மற்றும் கைபேசி சார்ந்த நிறுவனங்களும் முடங்கிப் போகும் நிலை நிலவுகின்றது. ஏற்கனவே வைத்தியசாலைகள் பலவற்றில் மின்சாரத்துக்குப் பதிலாக ஜென ரேட்டர்கள் மூலமான மின்சார உற்பத்திக்கு தேவையான டீசல் எரிபொருளுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

நேற்று முன்தினம் மிரிஹானவில் உள்ள ஜனாதிபதியின் இல்லத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களை பொலிஸ ாரும் ஆயுதப்படையினரும் கட்டுப்படுத்த முற்பட்டனர். அச்சமயம் ஏற்பட்ட கைகலப் பில் இருதரப்பிலும் பலர் காயமடைந்தனர்.

நேற்றைய இரவு நேர மிரிஹான ஆர்ப் பாட்டத்தின்போது போது ஒரு பெண் உட்பட 45 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் ஜீப் வண்டி ஒன்றும் ஆயுதப் படையினரை ஏற்றிவந்திருந்த பஸ்வண்டி யொன்றும், ஒரு முச்சக்கர வண்டி , இரு மோட்டார் சைக்கிள்கள் என்பவை தீயிடப் பட்டிருந்தன.

ஓர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் உட்பட ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் காய மடைந்திருந்தனர்.

எனவே நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் போன்று மேலும் ஆர்ப்பாட்டங்கள் நாடளா விய ரீதியில் வலுவடையும் என்றே எதிர்பார்க்க முடியும்.

ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்தியான்று நேற்றைய ஆர்ப்பாட்டம் வலுவடைந்த நிலை யில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அவரின் குடும்பத்தினரும் கொழும்பு காலிமுகத்தி டலில் அமைந்துள்ள ஷங்ரிலா ஹோட்டலில் தஞ்சமடைந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட் டிருந்தது.

அத்துடன், இலங்கையில் தற்போது வெளிநாட்டு உல்லாசப்பயணிகளின் வருகைக் காலமாகும். இருந்தபோதிலும் ஏற்கனவே இலங்கையில் வந்து தங்கியிருந்த உல்லாசப் பயணிகள் மோசமடைந்து வரும் நாட்டு நிலைமை காரணமாக தமது பயணத்தை சுருக்கிக்கொண்டு தாயகம் திரும்புவதற்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத் தில் நேற்றைய தினம் திரண்டிருந்தனர்.

இதன்காரணமாக நாட்டின் பொருளாதார நிலவரம் சீரடையும் வரை உல்லாசப் பயணத் துறை பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையி லேயே இருக்க முடியும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் வடக்கு - கிழக்கு மக்கள் யுத்த நிலபரம் காரண மாக எதிர் நோக்கிய கஷ்டமான நிலைமை களின் போது குதூகலித்திருந்த தென்னி லங்கை தற்போது அதன் பொலிவை இழந்த தாகவும் வடக்கு-கிழக்கு மக்கள் அனுபவித்த கஷ் ட- நஷ்டங்களின் தன்மையை தாமும் எதிர்கொள்ள தலைப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
பணியிடத்தில் நீங்கள் எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைத்து மகிழ்வீர்கள். சுபச்செலவுகள் ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு சுபநிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்ச்சி அடைவீர்கள்.

**இடபம்**
உழைப்பினால் வெற்றி பெறுவீர்கள். முதலீடு கூடும். பணியிடத்தில் நற்பெயர் எடுப்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். வரவு சுமாராக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் ஏற்படும்.

**மிதுனம்**
செலவுகளைக் குறைப்பீர்கள். நிம்மதியான நாள். உறவினர், நண்பர்களுக்கு கொடுத்த கடன் இன்று வசூலாகும். கலைத்துறையினருக்கு வருமானம் பெருகும். நிதி நிலை சீராகும்.

**கடகம்**
புதிய முதலீடுகளில் ஈடுபடுவது பற்றி யோசிப்பீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். கலகலப்பான நாள். நண்பர்களால் நன்மை உண்டு. உற்சாகமாக நல்ல செயலை செய்வீர்கள்.

**சிம்மம்**
எது செய்தாலும் நன்கு யோசித்த பிறகே அதில் ஈடுபடுங்கள். குடும்பத்தினரிடம் விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. எதிர்கால நன்மைக்கு வித்திடுவீர்கள். மகிழ்ச்சி கூடும் நாள்.

**கன்னி**
இன்று குடும்பத்தினருடன் ஏற்படும் நெருக்கம் மகிழ்ச்சி தரும். உடல் நலத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் ஒருவர் இடம் விட்டு இடம் மாறவாய்ப்பு உண்டு.

**துலாம்**
தொழில், ஷேர் முதலீடு முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். பணியாளர்கள் கூடுதலாக உழைத்து பாராட்டுப் பெறுவீர்கள். பணியில் அதிக கவனம் செலுத்தி பயன் அடைவீர்கள்.

**விருட்சிகம்**
வழக்குகள் தாமதமானாலும் அது வெற்றியை நோக்கிச் செல்லும். சிலரால் ஏற்பட்ட சிக்கல் நீங்கும். குதூகலமான நாள். முன்பிருந்த தடைகள் இன்று நீங்குவதால் மன உற்சாகம் அதிகரிக்கும்.

**தனுசு**
எதிர்பாராத நிகழ்ச்சியில் பங்கு பெறுவீர்கள். நன்மை உண்டு. எதையும் தைரியத்துடன் எதிர்கொண்டு மேன்மை அடைவீர்கள். பணியிடத்தில் நன்மைகள் ஓரளவுக்கு சிறப்பாக இருக்கும்.

**மகரம்**
கடன் சற்றுக் குறையும். சோம்பலை உதறுவது நல்லது. ஆடம்பர செலவுகளை குறைத்து நன்மை காண்பீர்கள். கவலை தீரும். நண்பருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள்.

**கும்பம்**
சுபநிகழ்ச்சிகள் பற்றிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள் எந்தவொரு முயற்சியிலும் சற்று தாமதம் உண்டாகும். பிறரிடம் கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பி கொடுப்பீர்கள்.

**மீனம்**
பழைய பிரச்னை தீர்ந்து குடும்பத்தில் நல்ல மாற்றம் ஏற்படும். பண வரவு சுமாராகவே இருக்கும். பொறுமை தேவை. வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

# புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு அதிக வசதிகள் செய்ய முடிவு

## தமிழக முதல்வர் ஸ்ராலின் அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 02

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களுக்கு உதவிகளை நேரடியாக தமிழக அரசு வழங்குவது தொடர்பான கோரிக்கைகளை பரிசீலிப்பதாக பிரதமர் கூறியுள்ளார் என்று தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி சென்றுள்ள தமிழக முதல்வர் நேற்று முன்தினம் பிரதமர் மோடியை சந்தித்துப் பேசினார்.

இதன் பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அத்துடன், இலங்கை அகதிகளை "புலம்பெயர்ந்த தமிழர்கள்" என்று அழைக்க எமது அரசு முடிவு செய்துள்ளது. புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு அதிக வசதிகளை செய்து கொடுக்கவுள்ளோம் - என்றார்.



# செல்வாக்குமிக்க இந்தியர்கள் ஸ்ராலினுக்கு 23ஆவது இடம்!

சென்னை, ஏப். 02

இந்தியாவின் சக்திவாய்ந்த 100 நபர்களின் பட்டியலை அந்த நாட்டின் பிரபல ஆங்கில சஞ்சிகை ஒன்று வெளியிட்டுள்ளது.

இதில், தமிழக முதலமைச்சர் ஸ்ராலின் 23ஆவது இடத்தில் இருக்கிறார். 2019 பாராளுமன்றத் தேர்தலுக்கு பிறகு தொடர் வெற்றிகளை ஈட்டியதன்மூலம் அவர் இந்த இடத்தைப் பிடித்துள்ளார்.



இந்தப் பட்டியலில் இந்தியப் பிரதமர் மோடி முதலிடத்திலும், உள்துறை அமைச்சர் அமித்ஷா இரண்டாமிடத்திலும் ஆர். எஸ். எஸ். தலைவர் மோகன் பகவத் மூன்றாமிடத்திலும் உள்ளனர்.

கடந்த ஆண்டு 13ஆவது இடத்தில் இருந்த உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் இந்தாண்டு 6ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் சோனியா காந்தி 27ஆவது இடத்திலும் ராகுல் காந்தி 51ஆவது இடத்திலும் பிரியங்கா காந்தி 78ஆவது இடத்திலும் உள்ளனர்.

(ஐ)

# காதலனை கட்டிவைத்துவிட்டு மாணவிமீது கூட்டு வன்புணர்வு

## கைதானோரில் நால்வர் சிறுவர்கள்

விருதுநகர், ஏப். 02

விருதுநகர் - அருப்புக்கோட்டையில் காதலனுடன் கடற்கரைப் பகுதிக்கு சென்ற மாணவியை சிலர் கூட்டுவன்புணர்வு புரிந்துள்ளனர். அத்துடன், பெண் அணிந்திருந்த நகைகள், அவர்களின் கைபேசிகளையும் பறித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட இருவரும் தங்கள் வீடுகளில் விஷம் அருந்தி தற்கொலை செய்துகொள்ள முயன்றுள்ளனர். இதைத் தொடர்ந்து அவர்களின் பெற்றோர் அவர்களை காப்பாற்றி மருத்துவமனைகளில் சேர்ப்பித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் நீதிவானிடம் வாக்குமூலம் அளித்ததைத் தொடர்ந்து இந்த வழக்குடன் தொடர்புடைய 7 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் நால்வர் சிறுவர்கள் என்றும், இவர்கள் தங்கியிருந்த இடங்களிலிருந்து போதைப் பொருள்கள் பயன்படுத்தப்பட்டமைக்கான ஆதாங்களும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# பொலிஸ் எல்லைப் பிரச்னையால் 3 மாதங்களாக பிணவறையில் உடல்!

இராமநாதபுரம், ஏப். 02

இராமநாதபுரம் மாவட்டத்தில் பொலிஸ் பிரிவு எல்லை பிரச்னை காரணமாக, மூதாட்டி ஒருவரின் உடல் 3 மாதங்களாக பிணவறையில் உருக்குலைந்து காணப்படுகின்றது.

இராமநாதபுரத்தில் நகர், பஜார், கேணிக்கரை பொலிஸ் நிலையங்கள் உள்ளன. மதுரை - இராமேஸ்வரம் வீதியில் மேற்கு பகுதி நகர பொலிஸ் நிலையத்தின் எல்லைக்குள்ளும் கிழக்கு பகுதி கேணிக்கரை பொலிஸ் எல்லைக்குள்ளும் வருகிறது. இந்நிலையில் அந்த

வீதியில் மூதாட்டி ஒருவர் கடந்த ஆண்டு டிசெம்பர் 30ஆம் திகதி மூதாட்டி ஒருவர் மயங்கி விழுந்தார்.

அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் கடந்த ஜனவரி 15ஆம் திகதி உயிரிழந்தார். மருத்துவமனை நிர்வாகம் பொலிஸாருக்கு அறிவித்தது. ஆனால், பொலிஸார் அவர் உயிரிழந்தது எந்தப் பக்கத்தில் என்ற கேள்வி எழுந்தது. ஆனால், எந்த எல்லையில் மூதாட்டி உயிரிழந்தார் என்பது சரியாகத் தெரியாத நிலையில இரு பொலிஸ் நிலையங்களும் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரிக்க மறுத்துவிட்டன.

இதனால், இரண்டரை மாதங்களுக்கு மேலாக மருத்துவமனை பிணவறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குளிர்சாதன வசதி சரியாக வேலை செய்ததால் அவரின் உடலும் உருக்குலைய ஆரம்பித்துள்ளது என்று அறிய வருகிறது.

(ஐ)

## இயேசுவோடு வாழ்வோம்



இயேசுவுக்கு எதிராக மேலும் பகை வளர்வதை யோவான் தொடர்ந்தும் காட்டுகின்றார். இன்றைய நற்செய்தியில் அவரைக் குறித்து மக்களிடையே பிளவு ஏற்பட்டது என்ற வாக்கியம் இன்றைய நற்செய்தியின்கருத்தாக அமைந்துள்ளது.

நம்முடைய நடை, உடை, பாவனைகள், பேச்சுக்கள் தான் நம்மை அடையாளப்படுத்தும். இங்கும் இயேசுவைப் பிடிக்கச் சென்றவர்கள் எவரும் இவரைப் போல் பேசினதில்லை என்று அவருடைய ஞானம் நிறைந்த பேச்சுக்கு சான்று பகர்கின்றார்கள்.

இயேசுவுக்கு எப்போதுமே எதிரிகளாகவே பரிசேயர் செயற்பட்டனர். அவரில் நம்பிக்கை வைத்த மக்கள் கூட்டத்திற்கு திருத்தச் சட்டம் தெரியாது. இவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று அவர்கள் மீது சாபமிட்டுப் பழிக்கின்றனர்.

இன்றும் எம்முடைய நடத்தையும் இந்த பரிசேயரைப் போலவே அமைந்திருக்கின்றது. நாமும் மற்றவர்களை இவர்கள் போலவே தீர்ப்பிடுகின்றோம். எனவே இத் தவக்காலத்தில் நாமும் மற்றவர்களை குறைவாக மதிப்பிடாமலும் தீர்ப்பிடாமலும் இயேசுவின் வார்த்தைகளை கேட்டு அதன்படி வாழ்வோம்.

**அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.**





# மிரிஹானவில் நடந்தது என்ன?

## விளக்குகிறார் பொலிஸ் பேச்சாளர்

கொழும்பு, ஏப். 02

**06 பொலிஸ் பிரிவுகளுக்கு விதிக்கப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 5 மணிக்கு தளர்த்தப்பட்டது. அந்த பொலிஸ் பிரிவுகளில் வசிப்பவர்கள் தற்போது வழமைபோன்று தமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.**

கொழும்பு வடக்கு, கொழும்பு மத்தி, கொழும்பு தெற்கு, நுகேகொட மற்றும் கல்கிசை ஆகிய பொலிஸ் பிரிவுகளிலும் கம்பஹா மாவட்டத்தில் களனி பொலிஸ் பிரிவிலும் நேற்று முன் தினம் அதிகாலை 12.30 மணி முதல் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்பட்டத்து.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வசிக்கும் நுகேகொடை மிரிஹான, பகிரிவத்த வீதியின் நுழைவாயிலுக்கு அருகில் பெருமளவான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாகவே ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, எரிபொருள் மற்றும் எரிவாயு நெருக்கடிக்குத் தீர்வு காணுமாறு கோரி நேற்று முன் தினம் இரவு சுமார் 7.30 மணி முதல் ஜூப்ளி போஸ்ட் சந்திக்கு அருகில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கூடியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லம் அமைந்துள்ள மிரிஹான பகிரிவத்தை வீதியை மறித்து பல மணிநேரம் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கட்சி பேதமின்றி வருகை தந்த பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு அரசிடம் தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

ஆர்ப்பாட்டம் காரணமாக நுகேகொடை-மஹரகம 119 வீதி முற்றாக தடைப்பட்டது.

பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு இடையில் மோதல் சூழ்நிலை நிலவியது.

இதனைக் கட்டுப்படுத்த பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினரும் இராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டனர்.



போராட்டக்காரர்கள் ஜனாதிபதியின் இல்லத்துக்குள் நுழைவதைத் தடுக்க பொலிஸாரும் இராணுவத்தினரும் கடுமையாக முயன்றதைக் காண முடிந்தது.

இரு பிரிவினருக்கும் இடையே கல் வீச்சு தாக்குதல் நடந்தது. இதையடுத்து பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் தண்ணீர் பீரங்கியை பயன்படுத்தி கட்டுப்படுத்தினர்.

எவ்வாறாயினும், தற்போது நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளதாகவும், மிரிஹானவில் நிலைமை முற்றாக அமைதியாக இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, போராட்டத்தின்போது மிரிஹான பகுதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டதுடன், சிறிது நேரத்திலேயே மின்சாரம் வழமைக்குத் திரும்பியது.

மேலும், அப்பகுதியில் இணைய இணைப்புகள் துண்டிக்கப்பட்டதாக சமூக வலைத்தளங்களில் ஏராளமானோர் தெரிவித்திருந்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த பலர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனை மற்றும் களுபோவில போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

காயமடைந்தவர்களில் ஊடகவியலாளர்கள் மற்றும் பல பொலிஸ் அதிகாரிகளும் அடங்குவர்.

ஆர்ப்பாட்டத்தின்போது அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸூக்கு சிலர் தீ வைத்து எரித்துள்ளதுடன், கல் வீச்சு காரணமாக மேலும் பல வாகனங்கள் சேதமடைந்தன.

கொழும்பு-கண்டி வீதியை கடக்கும் குழுவொன்றின் மற்றுமொரு ஆர்ப்பாட்டம் காரணமாக நேற்று முன் தினம் இரவு களனி, தலுகம பகுதியில் கொழும்பு-கண்டி வீதி முற்றாக தடைப்பட்டிருந்தது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு கோரி வீதியில் டயர்களை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)






## 3 செய்தியாளர்கள் உட்பட 35 பேர் மிரிஹான மோதல்களில் காயம்!

கொழும்பு, ஏப். 02

கொழும்பு - நுகேகொடை, மிரிஹான பிரதேசத்தில் ஜனாதிபதி இல்லத்தை முற்றுகையிட முயன்ற மக்களுக்கும் - பாதுகாப்புப் படையினருக்கும் இடையே இடம்பெற்ற மோதல்களில் 35 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 17 பொதுமக்கள், 17 பாதுகாப்புப் படையினர் மற்றும் 3 பத்திரிகையாளர்களும் அடங்குகின்றனர். மோதலின்போது ஒரு பொலிஸ் பஸ், ஒரு பொலிஸ் ஜீப், 2 மோட்டார் சைக்கிள்கள் தீவைத்து எரிக்கப்பட்டன. அத்துடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்ட பொலிஸ் வாகனமும் சேதப்படுத்தப் பட்டது. (அ)

## சிமெந்தின் விலை 500 ரூபா உயர்வு

கொழும்பு, ஏப். 02

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மற்றும் இறக்குமதி செய்யப்படும் சிமெந்தின் விலையை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.அதற்கமைய, 50 கிலோ சிமெந்து பொதியொன்றின் விலையை 500 ரூபாவினால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

அதன்படி சிமெந்து பொதியொன்றின் புதிய விலை 2,350 ரூபாவாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி மற்றும் மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு என்பன, இந்த விலை உயர்வுக்கு காரணமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மிரிஹானவில் கைதாகியவர்களுக்காக ஆஜராக சட்டத்தரணிகள் மன்றம் முடிவு

**கொழும்பு, ஏப். 02**

**மிரிஹான கலவரத்தைத் தொடர்ந்து பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 45 நபர்களுக்கு உதவ மக்களுக்கான சட்டத்தரணிகள் மன்றம் தீர்மானித்துள்ளது.**

சமூக பிரச்னைகளுக்காக நிலைப்பாட்டை எடுக்கும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குக் கண்டனம் தெரிவிப்பதாக சட்டத்தரணிகள் மன்ற ஒருங்கிணைப்பாளர் சேனக பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்- இந்த ஆர்ப்பாட்டத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டமை மற்றும் எரிபொருள், எரிவாயு மற்றும் பிற அத்தியா வசியப் பொருட்களின் பற்றாக்குறை குறித்து பொதுமக்கள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

கண்ணீர்ப் புகை, நீர்த்தாரை பிரயோகம் மற்றும் பல நபர்களை கைது செய்ததன் மூலம் தமது பிரச்னைகளுக்கு குரல் கொடுக்கும் மக்களுக்கு அரசாங்கம் பதிலடி கொடுத்துள்ளது.

எதிர்ப்பாளர்கள் எதிர்ப்பு தெரிவிப்பதற்கான அவர்களின் உரிமைகளுக்கு உட்பட்டவர்கள். பொதுமக்கள் பொறுமையின் அடிப்படையில் ஒரு முறிவு நிலையை அடைந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஜனாதிபதித் தேர்தலை கோரவில்லை.

ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்யும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டால், அத்தகைய நபர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கடமை மக்கள் சட்டத்தரணிகள் அமைப்புக்கு உண்டு-என்றார். (அ)



# தாவடியில் வீடொன்றுக்குள் வன்முறைக் குழு அட்டூழியம்

யாழ்ப்பாணம், நவ. 02

தாவடியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல் மோட்டார் சைக்கிள்களுக்கு தீவைத்துடன் பெறுமதியான பொருள்களை சேதப்படுத்தி அட்டூழியம் புரிந்துவிட்டுத் தப்பித்துள்ளது.

நேற்று முன் தினம் இரவு 8.30 மணியளவில் மின்வெட்டு வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

முதியவர்கள் மூவர் வசிக்கும் வீடு மீதே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட கும்பலே இந்த தாக்குதலை மேற்கொண்டதாக சுன்னாகம் பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# நீர்த்தேக்கங்களின் மட்டம் குறைவதே மின்வெட்டுக்கு முக்கிய காரணமாம்!

கொழும்பு, ஏப். 02

நாடு முழுவதிலும் உள்ள நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் குறைந்ததே தற்போது நிலவும் மின்வெட்டுக்கு முக்கிய காரணம் என மின்சக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2019 இல் வறண்ட கால நிலையின்போது நான்கு மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. அதே நேரத்தில் நாடு வழமைபோல் இயங்கியது மற்றும் தொற்றுநோய் அல்லது நெருக்கடி இல்லை.

சாதாரண நிலைமைகளின் கீழ் இலங்கையில் மின் உற்பத்தி திறன் குறைவாக உள்ளது.

தற்போது சமனலவெவ நீர்த்தேக்கம் 12.6 வீதமாகவும், கொத்மலை நீர்த்தேக்கம் 19 வீதமாகவும், காசல்ரீயில் 7.9 வீதமாகவும், மவுசாக்கலை 27 வீதமாகவும் காணப்படுகின்றன.

அனைத்து நீர்த்தேக்கங்களிலும் நீர் மட்டம் குறைவாக உள்ளது. நீர்மின் நிலையங்கள் மூலம் 20 சதவீத மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு கோவிட்-19 தொற்று காரணமாக மின் நுகர்வு குறைந்துள்ளது. அதனால் மின் நெருக்கடி ஏற்படவில்லை. 2021 ஆம் ஆண்டு நீர்த்தேக்கங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் வருடம் முழுவதும் மழை பெய்தது. அதனால் 50 வீதமான மின்சாரம் நீர் மின் நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டன.

நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைந்தால் எப்படி மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும்? எனவே நாட்டுக்குத் தேவை யான மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது-என்றார்.

திட்டமிடப்பட்ட மின்வெட்டுகளில் இருந்து பாராளுமன்ற குடியிருப்பு பகுதிகளுக்கு விலக்கு அளிக்கப்படுவதாக வெளியான செய்திகள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் வினவியபோது, அத்தகைய கூற்றுக்கள் பொய்யானது என அமைச்சர் மறுத்தார். (அ)

# மின்வெட்டு நேரம் இன்று குறையலாம்?

கொழும்பு, ஏப். 02

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கைக்கு வரவிருக்கும் டீசல் கையிருப்பை மின்சார சபைக்கு வழங்குவதற்கு உறுதியளித்துள்ளதன் காரணமாக, இன்று முதல் மின்வெட்டு நேரம் குறைக்கப்படும் என இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.சி. பெர்டினாண்டோ தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

இதன் விளைவாக இன்று முதல் நான்கு மணி நேரத்துக்கும் குறைவான மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் மின்சார சபைக்கு தொடர்ந்து உலை எண்ணெய் மற்றும் டீசல் விநியோகம் கிடைத்தால், மின்வெட்டை முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பஸ் சேவைகள் இனி குறைவடையக்கூடும்

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம்

கொழும்பு, ஏப். 02

தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவது நேற்று முதல் குறைவடையக்கூடும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய டீசல் தட்டுப்பாடு காரணமாக, 15 சதவீதமான தனியார் பஸ்களே நேற்று முன்தினம் சேவையில் ஈடுபட்டதாக அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்தார்.

இந்த நிலையில், டீசல் இன்மையால், இந்த நிலைமை மேலும் வீழ்ச்சியடையக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

டீசலைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விடயத்துடன் தொடர்புடைய அமைச்சரிடம் கோரியுள்ளாக அவர் மேலும் கூறினார். (அ)

# இலங்கைக்கான கடன் திட்டம் குறித்து பேச்சு நடத்த நாணய நிதியம் முடிவு

கொழும்பு, நவ. 02

இலங்கைக்காக நடைமுறைப்படுத்தக்கூடிய கடன் திட்டம் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க உள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

அதன் பேச்சாளர் ஜெரி ரைஸை மேற்கோள்காட்டி வெளிநாட்டு ஊடகமொன்று இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த மாதம் இடம்பெறவுள்ள நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் வொஷிங்டன் விஜயத்தில் அந்தப் பேச்சுவார்த்தை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

## அதிகரிக்கும் மருத்துவ நெருக்கடி நிலை;

# வைத்தியசாலைகளில் சிகிச்சைகளை மட்டுப்படுத்துவது குறித்து ஆராய்வு

கொழும்பு, ஏப். 02

இலங்கையில் மருத்துவ நெருக்கடி நிலை அதிகரித்து வரும் நிலையில வைத்தியசாலைகளில் சிகிச்சைகளை மட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் மருந்து மற்றும் சுகாதார உபகரணங்களுக்கான தட்டுப்பாட்டுக்கு மத்தியில், வைத்தியசாலைகளில் சிகிச்சைகளை மட்டுப்படுத்த, வைத்தியசாலை நிர்வாகப் பிரிவுக்குள் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

வைத்தியசாலைகளில் உள்ள மருந்துகளின் கையிருப்பானது, அடுத்த வாரத்துக்கு மட்டுமே போதுமானதாகும் எனத் தகவல்கள் கிடைத்துள்ளதென அந்தச் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரான வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்தார்.

இது குறித்து பதிலளித்த இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண, அவசியமான மருந்துகளின் அளவுகளை, வைத்தியசாலை களுக்கு தேவையான அளவு விநியோகிப்பதாக தெரிவித்தார். (அ)

# அச்சத்தில் ஞானக்கா!

கொழும்பு, ஏப். 02

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆஸ்தான ஜோதிடரான அநுராதபுரம் ஞானக்கா தனக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம் கலவரமாக மாறியபோது தனது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் பதற்றத்தின்போது ஜனாதிபதி மற்றும் இராணுவ தளபதியை அழைத்த ஞானக்கா, உடனடியாக தற்போது உள்ள பாதுகாப்பை விடவும் அதிக பாதுகாப்பு வழங்குமாறு கோரியுள்ளார்.

காளி அம்மனின் சக்தி உள்ளதாகக் கூறி மக்களை ஏமாற்றும் ஞானக்காகவுக்கு ஜனாதிபதி மற்றும் இராணுவத் தளபதி பாதுபாப்பை அதிகரிக்க இணக்கம் வெளியிட்டுள்ளனர் என்று குறித்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

எப்படியிருப்பினும் ஞானக்காவின் கோயில் மற்றும் அவரது புதிய ஹோட்டலையும் சுற்றிவளைப்பதற்கு மக்கள் தயாராகி வருவதாக குறித்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# நாட்டை முடக்கவேண்டும்!
## சம்பிக்க ரணவக்க கோரிக்கை



கொழும்பு, ஏப். 02

நாட்டை முடக்க வேண்டுமென முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க பகிரங்கமாக கோரிக்கை விடுத்துள்ளார்.

மிகவும் அத்தியாவசிய சேவைகளை மட்டும் முன்னெடுத்துக்கொண்டு நாட்டை முடக்க வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - இலங்கை மின்சார சபையின் நிர்வாகம் விசேட நிபுணர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

அரசாங்கத்தின் பிழையான தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளினால் இலங்கை மின்சார சபை பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறது.

தற்போதைய நிலைமைக்கு தொழிநுட்ப ரீதியான தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டும்.

எதிர்வரும் மே மாதம் பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பமாகும். அதுவரையில் நாட்டில் முடக்க நிலையை அமுல்படுத்த வேண்டும்.

எனவே கோவிட் காலத்தைப் போன்று முடக்க நிலை அறிவிக்கப்படவேண்டும் - என்றார். (அ)

# பெரும்பான்மைப் பலத்தை யாரும் அசைக்கவேமுடியாது
## தினேஸ் குணவர்தன திட்டவட்டம்



கொழும்பு, ஏப். 02

**அரசாங்கத்தின் பெரும்பான்மைப் பலத்தை அசைக்க முடியாது எனக் கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.**

**அரசாங்கத்தின் பெரும்பான்மைப் பலத்தை இல்லாமல் செய்வதாக வெளியிடப்படும் தகவல்களில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டார்.**

அரசாங்கத்தின் அமைச்சுப் பதவிகளை குறைப்பதனால் பிரச்னைகளுக்கு தீர்வு கிட்டாது எனவும், வினைத்திறனாக செயற்படவேண்டுமெனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு ரணிலிடம் அரசாங்கம் ஒருபோதும் கோரியதில்லை. ரணில் விக்ரமசிங்க பல தடவைகள் பிரதமர் பதவியை வகித்துள்ள அனுபவம் மிக்கவர். அவரது கருத்துக்களுக்கு செவி சாய்க்கப்பட்டாலும் பதவி வழங்கப்படாது.

நாட்டில் தற்பொழுது நிலவி வரும் பிரச்னைகளுக்கு நபர்கள் மீது குற்றம் சுமத்துவதனை விடவும், இயற்கை மீதே குற்றம் சுமத்தப்பட வேண்டும்.

கோவிட் காரணமாக ஒட்டுமொத்த உலகமே நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது - என்றார். (அ)

# நாட்டை ஆட்சி செய்ய முடியாவிடின் திறமை உள்ளோரிடம் வழங்குங்கள்!
## அரசிடம் கூறுகிறார் ஞானசார தேரர்

கொழும்பு, ஏப். 02

இந்த நாட்டை ஆட்சி செய்ய முடியாவிட்டால் ஆட்சி செய்யும் திறமையுடையவர்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்கவேண்டுமென பொது பலசேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

தற்போதைய பிரச்னைகளுக்கு தீர்வு வழங்க முடியாவிட்டால் தீர்வு வழங்க கூடிய ஆட்சியாளர்களிடம் அரசாங்கம் நாட்டை ஒப்படைக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டார். மாறாக நாடு கட்டுப்பாடின்றிச் செல்ல அனுமதிக்கப்பட முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் போராட்டங்களினால் நாடு மேலும் அராஜக நிலைக்கு தள்ளப்படும்.



கடந்த அரசாங்கத்தை குற்றம் சுமத்தி ஆட்சி செய்ய முடியாது எனவும் கூட்டாக இணைந்து எடுக்கப்படும் தீர்மானங்கள் மூலம் பிரச்னைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க முடியும்.

நாட்டு மக்கள் கடுமையான அழுத்தங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நாட்டு மக்களின் பட்டினியுடன் அரசாங்கத்தினால் விளையாட முடியாது. இந்தப் பிரச்னைகள் குறித்து விரிவாக ஆராயப்படவேண்டியது அவசியமானது.

கோவிட் பிரச்னைக்கு தீர்வு வழங்கியது போன்று அரசாங்கத்தினால் ஏன் இந்தப் பிரச்னைகளுக்கு தீர்வு வழங்க முடியாது.

தற்போது ஜனாதிபதி மீது நம்பிக்கையில்லை, பிரதமர் மீது நம்பிக்கையில்லை, அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை, பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது நம்பிக்கையில்லை. இவ்வாறு நாடு அராஜக நிலைக்கு தள்ளப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (அ)

# இந்த அரசு மீதான மக்களின் நம்பிக்கை சிதைந்துவிட்டது!
## சுதந்திரக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 02

நாடு அராஜக நிலை நோக்கி நகர்வதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஸ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாச இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களின் பிரச்னைகள் அவர்களின் உணர்வுகளை ஆட்சியாளர்கள் மலினப்படுத்தும் காரணத்தினால் இந்த நிலை உருவாகியுள்ளது.

இலங்கை தற்பொழுது அராஜக நாடாக மாற்றமடைந்துள்ளது. ஆட்சியில் இருப்பவர்களும் ஏனைய கட்சிகளும் மக்களை புரிந்துகொள்ளத் தவறியுள்ளனர்.

இந்த அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை சிதைந்துவிட்டது.

அரசாங்கத்தின் பிரதிநிதிகள் உணர்வுபூர்மாக அறிக்கைகளை வெளியிடுவதனால் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கப் பெறாது - என்றார். (அ)

# மிரிஹான சம்பவம் குறித்து கைதாவோர் மீது பயங்கரவாத சட்டம் பயன்படுத்த வேண்டாம்
## இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, ஏப். 02

மிரிஹான சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்த வேண்டாம் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் மிரிஹான சம்பவம் தொடர்பான நிலைமையை ஆராய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறப்புக் குழுவொன்றும் மிரிஹான பொலிஸ் நிலையத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு நுகேகொடை மிரிஹான பெங்கிரிவத்தையிலுள்ள ஜனாதிபதி இல்லத்தை முற்றுகையிட்டு மக்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்நிலையில், இதனை கட்டுப்படுத்த பொலிஸ், விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவம் குவிக்கப்பட்டது. பொலிஸாரால் கண்ணீர்ப் புகை வீசப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்த கொழும்பு வடக்கு, தெற்கு மற்றும் மத்திய, நுகேகொடை பொலிஸ் பிரிவு , களனி பொலிஸ் பிரிவு, கல்கிஸை பொலிஸ் பிரிவு ஆகிய பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இந்த ஊரடங்கு அதிகாலை 12.48 மணிக்கு அமுல்படுத்தப்பட்டு நேற்று முன் தினம் காலை 5.00 மணிக்கு தளர்த்தப்பட்டது. குறித்த சம்பவத்தில் 45 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடை சட்டத்தை பயன்படுத்த வேண்டாம் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பஸில் ராஜபக்ஷவை உடனே பதவி நீக்குக!

கொழும்பு, ஏப். 02

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் மத்தியில் எழுந்துள்ள எதிர்ப்பை எதிர்கொண்டு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை அப்பதவியில் இருந்து நீக்குமாறு பல தரப்பினரும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பஸில் ராஜபக்ஷவை நிதியமைச்சர் பதவியில் இருந்து நீக்குமாறு அரச சார்பு பிக்குகள் குழுவொன்றும் நேற்று முன் தினம் ஜனாதிபதியிடம் பலமான கோரிக்கையை முன்வைத்துள்ளதாக அரசாங்க உள்ளகத் தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற சம்பவம் மற்றும் அதிகரித்து வரும் மக்கள் எதிர்ப்பின் காரணமாக கவனம் செலுத்தியுள்ள அரசாங்கப் பின்வரிசை உறுப்பினர்கள் குழுவொன்று, நிதியமைச்சரை நீக்குமாறு ஜனாதிபதியிடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, அரசுக்கெதிராக பல்வேறு போராட்டங்கள் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், நேற்று முன் தினம் இரவு மின்துண்டிப்பு, எரிபொருள் பற்றாக்குறை, விலையேற்றம் போன்றவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் இல்லம் அமைந்துள்ள மிரிஹான பகுதியில் ஒன்றுதிரண்ட ஆர்ப்பாட்டக்காரர்களால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பணவீக்கம் மார்ச் மாதம் 18.8 சதவீதமாக உயர்ந்தது

கொழும்பு, ஏப். 02


இலங்கையின் பணவீக்கம், கடந்த மார்ச் மாதம் 18.8 சதவீதமாக அதிகரித்து, அதிகூடிய உயர்வை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் தரவுகளின்படி, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 164.9 ஆகவும் அதிகரித்தது.

மார்ச் மாதத்தில் உணவுப் பணவீக்கம் முந்தைய ஆண்டைக் காட்டிலும் 31 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இது 2019ஆம் ஆண்டைவிட 42.2 சதவீதம் அதிகமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நெஞ்சம் கவர்ந்த பாடல்கள் பதிவு செய்ய யாழ் மண்ணில் செயல்பட்ட நியூவிக்ரேர்ஸ்



யாழ்ப்பாண நகரம் எப்பொழுதும் கலகலப்பாக அதிகாலை முதல் நள்ளிரவு வரை இயங்கிக்கொண்டிருந்த ஒருகாலம்.

இற்றைக்கு நான்கு தசாப் தங்களுக்கு முன்னரான யாழ்ப்பா ணத்தில் பாடல்கள் கேட்பதற்குப் பஞ்சமில்லாமல் இருந்தது.

அதிகாலையில் நகரத்தின் ஒவ்வொரு பகுதிகளிலும் இருந்து வரும் பாடல்கள் நாம் எங்கோ ஒரு ஆலய சூழலுக்குள் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும். நேரம் செல்லச் செல்ல பாடல்கள் மாற்றமடையும். புதிய,பழைய பாடல்கள் என ஒலிக்கும்.


இவை எங்கே இருந்து ஒலிக்கும் என்பது உங்கள் கேள்வியாக எழுவதை உணர முடிகிறது.

ஒவ்வொரு தேனீர் சிற்றுண் டிச்சாலைகள், புகழ் பெற்ற உணவகங்கள் என்பனவற்றில் இருந்துதான் இவை மிகச்சிறந்த தொனியில் ஒலிக்கும்.

இன்று இலத்திரனியல் ஊடகங்கள் நிறைந்து விட்டன. ஆனால், அன்றைய காலகட்டத்தில் ஒரே ஓர் ஒலிபரப்பு நிலையம் தான் இருந்தது. அது, இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம்.

இங்கு ஒலிபரப்பாகும் பாடல்களை நாம் கேட்கலாம். ஆனால், நமக்குப் பிடித்தமான பாடல்களை எல்லாம் ஒரு கோர்வையாகக் கேட்க வேண்டும் என்றால் அதற்கு மக்கள் நாடிய நிறுவனங்களில் ஒன்று நியூவிக் ரேர்ஸ்.

மேலே குறிப்பிட்ட நிறுவ னங்கள் பலவற்றில் அன்று ஒலித்த



பாடல்களை சிறந்த உயர்தர தொழில் நுட்பத்தில் பதிவு செய்து வழங்கியிருந்தவர்கள் நியூவிக் ரேர்ஸ் நிறுவனத்தினர்.

யாழ்ப்பாணத்தின் அடையாளங் களில் ஒன்றாக நியூவிக்ரேர்ஸ் திகழ்ந்தது என்றால் மிகையல்ல.

யாழ்ப்பாணத்துக்கு ஒலி,ஒளி தொடர்பான நவீன தொழில் நுட்பத்தை அன்று அறிமுகப்படுத் தியதில் நியூவிக்ரேர்ஸ் நிறுவனத்துக்கு பாரிய பங்கு உண்டு.

அந்த வகையில் நியூவிக்ரேர்ஸ் உரிமை யாளர் குணம் என்று எல் லோராலும் அன்பாக அழைக்கப் பட்டு வந்த தேவசகாயம் ஆசீர்வாதம் அவர்கள் பாராட் டுதலுக்கு உரியவர்.

பாடல்கள் கேட்கும் இசைப் பிரியர்களின் பேரபிமானத்துக் குரிய நிறுவனமாக நியூவிக்ரேர்ஸ் விளங்கியது.

வடபுலத்தின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து பல்லா யிரக்கணக்கான வாடிக்கையா ளர்களைத் தன்னகத்தே கொண் டிருந்த நிறுவனம்.

மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை என எல்லா இடங்களி லிருந்தும், ஒலிப்பதிவு நாடாக்களில் பாடல்கள் பதிவு செய்வதற்காக நாள் தோறும் பலர்



நியூவிக்ரேர்ஸை நாடிவருவார் கள்.

அவர்கள் தாங்கள் விரும்பும் பாடல்களை நியூவிக்ரேர்ஸில் உள்ள பாடல்கள் தெரிவு செய்யும் புத்தகத்திலிருந்து தேர்ந்து பதிவு செய்துகொள்வார்கள்.

பாடல், பாடியவர்கள், படம், இசையமைப்பாளர்,பாடலாசிரியர் ஆகியோரின் விபரங்கள் உள்ள டக்கி புத்தகங்களும் அச்சிட்டு வைத்திருந்தார்கள். அதிலும் நியூவிக்ரேர்ஸ் அன்று புதுமையை நிலைநாட்டியிருந்தது.

ஒலிப்பதிவுப் பணிகளை மேற் கொள்வதற்காகப் பல பணியா ளர்கள் நீண்ட நேரம் பணியாற் றினார்கள்.

வெளிமாவட்டங்களில் இருந்து வருகின்றவர்கள் மிக அதிகமான ஒலிப்பதிவுகளைச் செய்துகொள்ள வேண்டிய வேளைகளில் பணியாளர்கள் இரவு முழுவதும் நித்திரை விழித்திருந்து ஒலிப்பதிவுப் பணிகள் நியூவிக்ரேர்ஸில் நடைபெற்றுள்ளன.

இவ்வாறு மக்களை மகிழ் விக்கும் மகத்தான பணியை யாழ்ப்பாண மண்ணில் மேற்கொண்டு மக்கள் அபிமா னத்தை வென்றெடுத்தவர் குணம் அவர்கள்.

> **குணம் அண்ணா என்று அன்போடு அழைத்துப்பழகி வந்த ஒரு நிறைவான மனிதர். யாழ்.மண்ணில் வாழ்ந்த காலத்தில் வாரத்தில் ஒரு நாளாவது அவருடன் உரையாடிக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும். கலைகள் தொடர்பாகவே எமது உரையாடல்கள் அமையும். கலைஞர்களுக்கு தன்னால் என்ன செய்யலாம் என்பது அடிக்கடி கேட்டிருக்கிறார். அந்த உரையாடல் வழியாகத் தோற்றம் பெற்றதே நியூவிக்ரேர்ஸ் எலக்ரோனிக் கொம்லெக்ஸ். இங்கு எமக்கான ஒலி, ஒளிப்பதிவுகளை மிக நேர்த்தியாக மேற்கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஒரு சில பதிவுகளையும் மேற்கொண்டிருந்தோம்.**
>
> **அந்தக் கலைப்பொக்கிசம் காப்பாற்றப்பட முடியாத நிலைக்குச் சென்றுவிட்டமை மிகுந்த மனக்கவலை.**

தொலைக்காட்சி யுகம் தொடங்கிய பொழுது, யாழ்ப் பாண மக்களுக்கு தொலைக் காட்சியை அறிமுகப்படுத்திய முன்னோடியாக விளங்கியவர் நியூவிக்ரேர்ஸ் குணம் அவர்கள்.


பாமர மக்களும் தொலைக் காட்சி பார்ப்பதற்கு வழிவகுத்து கிராமமட்டங்களில் இயங்கிய சனசமூக நிலையங்களுக்கு தொலைக்காட்சிப்பெட்டிகளை அன்பளிப்பாக வழங்கியவர்.

யாழ்ப்பாணத்துக்கு வீடியோ ஒளிப்பதிவுச் சாதனங்களை முதன்முதலில் அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர்கள் நியூவிக் ரேர்ஸ் நிறுவனத்தினர் என்பதை அந்தக் காலகட்டத்தைச் சேர்ந்த வர்கள் அறிந்திருக்கிறார்கள்.

ஈழத்துக்கலைஞர்களின் கலைப் படைப்புகளை ஒலி, ஒளிப்பதிவு செய்வதற்காக யாழ்ப்பாணம், மணிக்கூட்டு வீதி, பி.எம்.சி. லேனில் நான்கு மாடிக் கட்டிடம் அமைத்து அதில் ஒலி, ஒளிப் பதிவுக்கூடங்களை நிறுவினார்.

மேல்மாடியில் திறந்த கலை யரங்கம் ஒன்றையும் அமைத்தி ருந்தார்.

யாழ்ப்பாணத்தில் கலைப் பணி யாற்றும் கலைஞர்களின் தேவை களைப் பூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு பணிகளை குணம்



அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

யாழ்.திறந்தவெளியரங்கில் 70ன் பிற்பகுதியில் நடைபெற்ற கே.ஜே.ஜேசுதாஸ் இசைக்கச்சேரி, யாழ்ப்பாணம் துரையப்பா விளை யாட்டரங்கில் நடைபெற்ற ரி.எம். சௌந்தரராஜன் இசைக் கச்சேரி என்பவற்றை நியூவிக்ரேர்ஸ் நிறுவ னத்தின் ஒளிப்பதிவுச் சாதனங்களே ஒளிப்பதிவுச் செய்தன.

நாட்டின் போர்ச்சூழல் அவரை யும் புலம்பெயர வைத்தது. அவுஸ் திரேலியா சென்று வாழ்ந்து வந் தார். அங்கும் தனது பணிகளைத் தொடர்ந்தார்.

ஓவியத்தில் ஆர்வம் கொண்ட இவர் பல ஓவியங்களையும் வரைந்துள்ளார்.



உடல் உபாதை காரணமாகச் செயற்பட முடியாத நிலை ஏற் படும் வரை வீடியோ கலைப்பணி யாற்றிவந்தார்.

வைத்தியமனையில் சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டிருந்த வேளை களில் மருத்துவர்கள்,தாதியர் ஆகியோரின் மிகுந்த பரிவுக்குரி யவராக குணம் அவர்கள் விளங் கினார். 2021 ஏப்ரில் 02ம் திகதி குணம் அவர்கள் இவ்வுலகிலிருந்து விடைபெற்றார்.

அகவை எண்பது வரை வாழ்ந்து மக்களை நேசித்த குணம் அவர் களின் முதலாம் ஆண்டு இன்று நினைவு கூரப்படுகின்றது.

அன்னாரின் இழப்பால் துயரத் தில் ஆழ்ந்துள்ள அவரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்.

-எஸ்.கே.ராஜென்

## பாகிஸ்தான் நெருக்கடி:

## இம்ரான் கான் ஆற்றிய திடீர் தொலைக்காட்சி உரை

# “ராஜினாமா கிடையாது” நாளை வாக்கெடுப்பு!

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலையில் அந்நாட்டு தொலைக் காட்சியில் தோன்றி உரையாற்றும் போது, சமீபத்திய நெருக்கடி காரண மாக தமது பதவியில் இருந்து விலகப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார். மேலும், கடைசி பந்துவரை ஆடுவேன் என்று அவர் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

இம்ரான் கான் அரசு, பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்கொண்டுள்ள நிலையில், அவருக்கு எதிராக வாக்கெடுப்பு நடப்பதாக தெரிகிறது.

இந்த நிலையில், இம்ரான் கான் தொலைக்காட்சியில் பேசியதன் விவரம்:

“பாகிஸ்தானியர்களே, இன்று நான் உங்களுடன் ஒரு மிக முக்கியமான விஷயத்தை பகிர விரும்புகிறேன். அதை நேரலையில் செய்ய முடிவு செய்துள்ளேன். இது பதிவு செய்யப்பட்ட காணொளி கிடையாது. இது பாகிஸ்தானின் எதிர்காலம் பற்றியது. பாகிஸ்தானுக்காக முடிவு எடுக்க வேண்டிய நேரம் இது. எங்களிடம் இரண்டு வழிகள் உள்ளன. எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும்.

நான் உங்களிடம் மனம் விட்டு பேச விரும்புகிறேன். என்னைப் போன்ற ஒருவர் ஏன் அரசியலுக்கு வர வேண்டும் என்பதை மக்களிடம் சொல்ல விரும்பு கிறேன். ஒரு தலைவரின் வாழ்க்கையைப் பார்த்தால் அரசியலுக்கு வருவதற்கு முன் அவரை யாரும் அறிந்திருக்க மாட்டார்கள் என்பது தெரியும். அதபோல அரசியலுக்கு வருவதற்கு முன் சாதித்தவர்கள் மிகக் குறைவு.

காயிதே அசாம் ஜின்னா மிகப் பெரிய அரசியல்வாதி. ஆனால் தலைவராக ஆவதற்கு முன்பு, அவர் இந்தியாவில் ஒரு பெரிய வழக்கறிஞராக அங்கீகரிக்கப் பட்டார், அவருக்கு என அந்தஸ்து இருந் தது. இப்போது அரசியலுக்கு வருபவர் களில் பெரும்பாலானோருக்கு அவர்கள் அரசியலுக்கு வரும் முன்பு அவர்களின் பெயர் கூட வெளியே தெரியாது.

நான் ஒரு அதிர்ஷ்டசாலி. அரசிய லுக்கு வருவதற்கு முன்பு என்னிடம் பணம், புகழ் எல்லாம் இருந்ததற்கு அல் லாஹ்வுக்கு நன்றி கூறுகிறேன். இன்றும் எனக்கு எதுவும் தேவையில்லை.

சுதந்திர பாகிஸ்தானில் பிறந்த முதல் தலைமுறை பாகிஸ்தானியர்களில் நானும் ஒருவன். பாகிஸ்தான் என்னை விட ஐந்து வயதுதான் மூத்தது. என் பெற்றோர் அடிமை காலத்தில் பிறந்த வர்கள். என் தந்தை பாகிஸ்தானிய இயக் கத்தில் பங்கேற்றார். சுதந்திர நாட்டில் பிறந்த நான் மிகவும் அதிர்ஷ்டசாலி என்று அவர் எப்போதும் என்னை உணர வைப்பார். நேர்மையான மனிதர்களாக இருந்தவர்கள், ஆங்கிலேயர்களின் அடிமைத்தனத்தை மிகவும் மோசமாகக்



கண்டனர். நேர்மை என்றால் என்ன என்று சிறுவயதில் இருந்தே சொல்லப்பட்டிருக்கிறோம். நேர்மை ஒரு சுதந்திர தேசத்தின் அடையாளம்.

நான் ஏன் அரசியலுக்கு வந்தேன்? நான் அரசியல் மாணவனாக இருந்ததால். பல்கலைக்கழகத்தில் அரசியல்படித் தேன். அல்லாமா இக்பால் கனவு கண் டது போல் நம் நாடு மாறவே முடியாது என்று நினைத்ததாலேயே நான் அரசியலுக்கு வந்தேன்.

நான் அவரைப் போல ஒரு தலைவ



ராக இருக்க விரும்பினேன். இந்த கனவுக் காக அவர் போராடியது போல் நானும் போராட விரும்பினேன். அவர் உடல் நிலை சரியில்லாத நிலையிலும் பாகிஸ் தானுக்காக போராடினார். பாகிஸ் தானுக்கு என பெரிய நோக்கம் இருந் தது. நாம் ஒரு இஸ்லாமிய ஃபலாஹி சமஸ்தானமாக மாற வேண்டியிருந்தது.

நமது தேசத்தை கட்டியவர்கள் இஸ்லாமிய அரசை உருவாக்க வேண்டும் என்று எழுதியுள்ளனர். இஸ்லாமிய அரசைப் பற்றிப் பேசும் போதெல்லாம் மதீனாவை பற்றித்தான் பேசுகிறோம். இது இஸ்லாத்தின் பொற்காலம். நான் அரசியலில் ஈடுபடத் தொடங்கியதில் இருந்து எப்போதும் ஒன்றைத்தான் சொல்லி வருகிறேன். நான் யாருக்கு முன்பும் தலைகுனிய மாட்டேன். என் மக்கள் தலை குனியவும் விட மாட் டேன். அதாவது, என் மக்களை அடிமைகளாக இருக்க நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்.

நான் ஆட்சிக்கு வந்ததும், நமது வெளியுறவுக் கொள்கை சுதந்திரமாக இருக்கும் என்று முடிவு செய்தேன். சுதந்திரமான வெளியுறவுக் கொள்கை யின் அர்த்தம் அது பாகிஸ்தானின் நலனுக்கானதாக இருக்க வேண்டும். நாம் யாருக்கும் எதிரியாக இருப்போம் அல்லது யாரையும் எதிர்ப்போம் என் பதல்ல சுதந்திர வெளியுறவுக் கொள்கை.

இந்தியாவில் உள்ளவர்கள், பாகிஸ்தானியர் ஒருவரை அதிகம் அறிந்தவராக இருந்திருந்தால் அது நானாகவே இருப்பேன். அங்கு எனக்கு நண்பர்கள் இருந்ததால் மட்டுமல்ல. என்னை அவர்கள் கிரிக்கெட் மூலம் நன்கு அறிந்திருந்தார்கள்.

எனக்கு அமெரிக்காவை நன்றாக தெரியும். அவர்களின் அரசியலையும் தலைவர்களையும் தெரியும். பிரிட்டன் எனக்கு இரண்டாவது வீடு போன்றது.

நான் எந்த மனித சமுதாயத்திற்கும் எதிராக இருக்க முடியாது. ஆம், அவர் களின் தவறான கொள்கைகளை நாங்கள் விமர்சிக்கிறோம். பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் பாகிஸ்தான் பங்கேற்ற போது. ஜெனரல் முஷாரப் அந்த முடிவை எடுத்தபோது நான் அந்தக் கூட்டத்தில் இருந்தேன்.

அமெரிக்காவை ஆதரிக்கவில்லை என்றாலும் கூட, அவர்கள் நம்மை கொல்லக்கூடாது என்று எங்களிடம் கூறப்பட்டது. 9-11க்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று அப்போதும் சொன்னேன். தீவிரவாதத் திற்கு எதிராக அவர்களுக்கு உதவ வேண்டும், ஆனால் அதற்கு பாகிஸ் தானியர்களை பலி கொடுக்க வேண்டுமா என்று கூறினேன்.

80களில், பாகிஸ்தான் அமெரிக்கா வின் முன்னரங்க கூட்டு நாடாக மாறியது. நாங்கள் ரஷ்யாவுக்கு எதிராக போர் தொடுத்தோம். நாங்கள் முஜாஹிதீக்களை தயார் செய்து, ஆப்கானிஸ்தானில் ரஷ்யா ஆட்சி செய்வதால் நாங்கள் ஜிஹாத் செய்கிறோம் என்று சொன்னோம்.

அந்த ஜிகாத் முடிந்தவுடன், சோவியத் தோற்கடிக்கப்பட்டு, அமெரிக்கா வெளியேறியது, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, நமக்கு நண்ப னாக இருந்த அதே அமெரிக்கா, நம் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது. நாம் யாருக்காக போராடினோமோ அதே அமெரிக்கா நம் மீது தடைகளை விதித்தது, என்றார் இம்ரான் கான்.

நவாஸ் ஷெரீப், பொது நிதியில் தனக்கென பல தொழிற்சாலைகளைக் கட்டியதாகவும், பின்னர் தனது செல் வாக்கைப் பயன்படுத்தி வங்கிக் கடன் களைத் தள்ளுபடி செய்ததாக கூறினார்.

அனைத்து வளர்ந்த நாடுகளுக்கும் பொதுவான ஒன்று உள்ளது - அனைத்து குற்றவாளிகளும், எவ்வளவு செல்வாக்கு பெற்றவர்களாக இருந்தாலும், அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுகிறார்கள். ஆனால் பாகிஸ்தானில் அப்படி இல்லை.

நம்பிக்கை வாக்கெடுப்பின் முடிவு எதுவாக இருந்தாலும், நான் வலுவாக மீண்டு வருவேன். பாகிஸ்தானின் எதிர் காலம் குறித்து ஞாயிற்றுக்கிழமை முடிவு செய்யப்படும். ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வாக்கெடுப்பு பாகிஸ்தான் எந்த வழியில் செல்ல வேண்டும் என் பதை தீர்மானிக்கும்.நான் பதவி விலக மாட்டேன், கடைசி பந்து வரை போரா டுவேன். இந்த நாட்டுக்கு இப்போது நடக்கும் துரோகத்தை அனுமதிக்க மாட்டோம்.

இவ்வாறு இம்ரான் கான் தனது நாட்டுமக்களுக்கான உரையில் தெரி வித்திருந்தார்.

பாகிஸ்தானில் ஆளும் இம்ரான் கான் அரசுக்கு எதிராக எதிர்கட்சிகள் நம் பிக்கை இல்லா தீர்மானத்தை கொண்டு வந்தன. இதில், இம்ரான் கானின் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை முத்தஹிதா காமி இயக்கம் பாகிஸ்தான் கட்சி விலக்கிக் கொண்டதால் அவரது அரசு பெரும்பான்மையை இழந்தது.

இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் பட்டியலிடப்பட்ட விஷயங்களை விவாதிக்க அதன் துணை சபாநாயகர் காசிம் சூரி எம்.பி.க்களை கேட்டுக் கொண்டார். ஆனால், நம்பிக்கை இல்லா தீர்மானம் மீது உடனடியாக வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று எம்.பிக்கள் கோரினார்கள். அதற்கு துணை சபாநாயகர் அனுமதி மறுக்கவே அவையில் கூச்சல் குழப்பம் நிலவியது. இதைத்தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிவரை நாடாளுமன்ற அலுவலை ஒத்திவைப்பதாக துணை சபாநாயகர் அறிவித்தார்.

முன்னதாக, இந்த தீர்மானத்தை எதிர்கட்சி தலைவர் ஷெபாஸ் ஷரிஃப் மார்ச் 28ஆம் திகதி தாக்கல் செய்தார். அதில் 161 உறுப்பினர்கள் கையெழுத் திட்டிருந்தனர். அதே நாளில் தீர்மானம்




மீதான விவாதத்தை நடத்தவும் ஒப்புதல் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் இந்த விவகாரம் மீதான நாடாளுமன்ற அலு வல், வியாழக்கிழமை நான்காவது விஷ யமாக பட்டியலிடப்பட்டிருந்தது.


இந்த நிலையில் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு ஏப்ரல் 3ஆம் திகதி நடை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள்

14. 
இவ்வுருவில் உள்ள முக்கோணிகள் எத்தனை?
1) 31 2) 13 3) 42


15. 
சதுரமுகி தாயக்கட்டை அருகில் தரப்பட்டுள்ளது. இதன் எதிர்ப்பக்கங்களின் கூட்டுத்தொகை 7 எனின் சரியாகக் காட்டப்பட்ட உரு எது?




16. 

= ........................................


எண் சட்டகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்களைக் கூட்டினால் கிடைக்கக்கூடிய எண் யாது?
1) 1910 2) 110 3) 200

17. 
இங்கு காட்டப்பட்டுள்ள சதுரமுகி கட்டை ஒன்றினைச் சுற்றிவர தீந்தை பூசப்பட்ட பின்பு கோட்டின் வழியே வெட்டி எடுக்கப்பட்டது. தனித்தனியே எடுக்கப்பட்ட பின்னர் எந்த பக்கமும் நிறம் பூசப்படாத துண்டுகள் எத்தனை காணப்படும்?
1) ஒன்றுமில்லை 2) இரண்டு 3) ஒன்று

18. தவறான கணிதக்கோவையைத் தெரிவு செய்க.
1) $5 \times 5 - 5 = 20$ 2) $8 \times 8 + 6 = 70$ 3) $0 \times 3 \times 3 = 9$

19. ஓர் எண்ணை இரண்டால் பெருக்கி ஐந்தால் வகுத்து இரண்டைக் கூட்டினால் நான்கு கிடைக்கும் எனின் முதலில் குறிப்பிட்ட எண் எது?
1) 2 2) 5 3) 3

20. கீழே தரப்பட்ட கடிகார முகங்கள் காட்டும் நேரங்களை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் நேரத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்குபடுத்தும் போது பெறப்படுவது





1) DCAB 2) DABC 3) BADC


21. ஒவ்வொரு பிள்ளைகளும் பிறந்த ஆண்டு, மாதம், திகதிகள் கீழே தரப்பட்டுள்ளன. அவர்களின் வயதுகளின் அடிப்படையில் கூடிய வயதிலிருந்து குறைந்த வயது வரை ஒழுங்குபடுத்தும் போது காட்டும் சரியான விடை.

| | |
|---|---|
| நிகிதா | 02.04.2010 |
| சுவேதா | 06.03.2009 |
| நிவேதா | 04.04.2010 |
| அயித்தா | 23.08.2009 |

1) நிவேதா, நிகிதா, அயித்தா, சுவேதா
2) சுவேதா, அயித்தா, நிகிதா, நிவேதா
3) அயித்தா, சுவேதா, நிகிதா, நிவேதா

22. 

அருகில் காட்டப்பட்ட உருவில் மரக்கட்டைகள் தரப்பட்டுள்ளன. இவை ஒவ்வொரு துண்டும் அதற்குக் கீழே உள்ள துண்டின் நிறையின் கால்வாசியாகும். 4 ஆவது துண்டின் நிறை 4800g எனின், துண்டு A இன் நிறை யாது?
1) 1200g 2) 600g 3) 75g

23. 


இச் சுழலியை அம்புக்குறி வழியே சுழற்றும்போது இலக்கம் 3 தொடுகையுறும் எழுத்து யாது?

## விடைகள்

| | | |
|---|---|---|
| 13. 2 | 17. 3 | 21. 2 |
| 14. 1 | 18. 3 | 22. 3 |
| 15. 2 | 19. 2 | 23. 3 |
| 16. 3 | 20. 1 | |

கல்வி tv CHANNEL-1

**02.04.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**02.04.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஜனாதிபதியின் இயலாமை உலகுக்கு வெளிப்பட்டுள்ளது!

**திருகோணமலை, ஏப். 02**
**பொருளாதார ரீதியில் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாத தனது இயலாமையை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தியுள்ளார் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு அவர் அனுப்பி வைத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில், "கொரோனா தொற்றுக் காரணமாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது போனதாக, கொழும்பில் நடைபெற்ற பிம்ஸ்ரெக் மாநாட்டில் உரையாற்றும் போது, ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த மாநாட்டில் உரையாற்றிய பங்களாதேஷ் பிரதமர் பேகம் ஷேக் ஹஸீனா, கொரோனா தொற்றுக்கு மத்தியிலும் தமது நாடு 6.3 சதவீதம் பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

"இலங்கையும் பங்களாதேஷும் தெற்காசிய நாடுகள். இரண்டுக்கும் கொரோனா பொதுப் பிரச்னை. இருந்தும் அந்த நாடு பொருளாதாரத்தில் முன்னேறியுள்ளது. நமது பொருளாதாரம் அதலபாதாளத்தை அடைந்துள்ளது.

"போலி விளம்பரங்கள் மூலம் மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்று ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தார். எனினும், அவரால் கொரோனா சவாலை வெற்றி கொள்ள முடியவில்லை.

"ஆடத் தெரியாதவன் மேடையைக் குறை சொல்வது போல, பொருளாதாரம் தெரியாத ஜனாதிபதி, அதற்கு கொரோனாவை காரணம் காட்டுகின்றார். இதனால் அவர் தோல்வியடைந்ததோடு மட்டுமல்லாது, நாட்டு மக்களையும் பொருளாதாரத்தில் தோல்வியடையச் செய்துள்ளார்" மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)



# கிரவல் அகழ்வை எதிர்த்து கன்னியாவில் ஆர்ப்பாட்டம்!

திருமலை, ஏப். 02

திருகோணமலை - கன்னியா - பீலியடி பகுதியில் முன்னெடுக்கப்படும் கிரவல் மணல் அகழ்வு பணிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று அந்தக் கிராம மக்களால் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கிரவல் அகழ்வுக்கு பயன்படுத்தப்படும் இராவணன் வீதியை மறித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. பதாதைகளை ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பி மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

மணல் அகழ்வு காரணமாக சுற்றுச்சூழல் மாசடையும் அதேவேளை, கனரக வாகனங்கள் பயணிப்பதால் வீதிகள் மிக மோசமாக பழுதடைந்திருக்கின்றன என்றும் போராடிய மக்கள் சுட்டிக்காட்டினர்.

இதன்போது, அந்த கிராமத்து மக்கள், கர்ப்பவதி பெண்கள், சிறுவர்கள், ஓட்டோ சாரதிகள் மற்றும் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உறுப்பினர்கள், தேசிய நல்லிணக்கத்திற்கான ஐக்கிய முன்னணி தலைவர், ஏனைய சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)



# காணி பிணக்குகள் தொடர்பில் திருக்கோவிலில் தெளிவூட்டல்!

திருக்கோவில், ஏப். 02

அம்பாறை - திருக்கோவில் பிரதேச சபை உறுப்பினர்கள் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரஜைகள் அமைப்புக்களின் நிர்வாகிகள் ஆகியோருக்கான காணிப் பிணக்குகள் மற்றும் சட்டங்கள் தொடர்பான தெளிவூட்டல் ஒருநாள் செயலமர்வு திருக்கோவில் பிரதேச சபையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

திருக்கோவில் பிரதேச சபையின் செயலாளரின் ஒழுங்கமைப்பில் திருக்கோவில் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த செயலமர்வில் திருக்கோவில் பிரதேசத்தில் காணப்படும் தீர்க்கப்படாத காணிப் பிணக்குகளை தீர்ப்பது மற்றும் காணிச் சட்டங்கள் தொடர்பாக வளவாளர்களால் தெளிவூட்டப்பட்டன.

சட்டம் மற்றும் சமூகப்பணி அமைப்பின் ஒருங்கிணைப்புடன் இந்தச் செயலமர்வு இடம்பெற்றதுடன் வளவாளராக கிழக்கு மாகாண காணி உதவி ஆணையாளர் எஸ். ரவீந்திரன் அம்பாறை மாவட்ட தலைமை காரியாலய உத்தியோகத்தர் கே. எல். எம். முஷமில் ஆகியோர் கலந்து கொண்டு காணி தொடர்பான தெளிவூட்டல்களை வழங்கினர். (ஐ)

# சமுர்த்தி பயனாளிக்கு புதிய வீடு கையளிப்பு

திருக்கோவில், ஏப். 02

அம்பாறை - திருக்கோவில் பிரதேச செயலர் பிரிவில் விநாயகபுரம் 3 பாலக்குடா கிராமத்தில் சமுர்த்தி சௌபாக்கியா வாரத்தை முன்னிட்டு புதிய வீடு ஒன்று பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரன் தலைமையில் விநாயகபுரம் பாலக்குடா கிராமத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வீடற்று வாழ்ந்த குடும்பம் ஒன்றுக்கு ஆறு இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே. எம். ஏ. டக்ளஸ் பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே. எம். ஏ. டக்ளஸ் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரன் உதவிப் பிரதேச செயலாளர் கே.



சதிசேகரன் விநாயகபுரம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு இருந்தனர். (ஐ)

# ஹெரோயின் கடத்திவந்த காத்தான்குடிவாசி கைது!

காத்தான்குடி, ஏப். 02

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு விற்பனைக்காக கடத்தி வரப்பட்ட ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவரை கைது செய்துள்ளாரென மாவட்ட குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி பி. எஸ். பி. பண்டார தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தை சேர்ந்த நபர் ஒருவர் ஹெரோயின் போதைப் பொருளுடன் கொழும்பு மாளிகாவத்தையில் இருந்து தனியார் பேருந்து ஒன்றில் மட்டக்களப்பு காத்தான்குடி பிரசேத்துக்கு வருவதாக மாவட்ட குற்ற விசாரணை பிரிவுக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலுக்கு அமைய மட்டக் களப்பு பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மா சிங்க ஆலோசனையின் கீழ் மாவட்ட குற்ற விசாரணை பிரிவு பொறுப் பதிகாரி பி. எஸ் .பி .பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மட்டக்களப்பு நகர் பகுதியில் தேடுதலில் ஈடுபட்டனர்.

இதன்போது, குறித்த தனியார் பேருந்தினை சோதனையிட்டபோது குறித்தநபர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மாவட்டக் குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட குறித்த நபரின் தொண்டைப்பகுதியில் இருந்து 5.6 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டதாக மாவட்ட குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதி காரி பொறுப்பதிகாரி பி. எஸ். பி. பண்டார தெரிவித்துள்ளார்

மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் கீழ் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் மற்றும் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மா சிங்க ஆகியோரின் பணிப்புரையின் கீழ் தொடர்ச்சியாக மாவட்டத்தில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரினால் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஓட்டமாவடியில் எரிவாயுவுக்காக மக்கள் நீள்வரிசையில் காத்திருப்பு

மட்டக்களப்பு, ஏப். 02

மட்டக்களப்பு - ஓட்டமாவடி அமீரலி விளையாட்டு மைதானம் மற்றும் வாழைச்சேனை பெற்றோல் நிலையத்தில் எரிவாயுக் காக மக்கள் நீண்ட வரிசை யில் காத்திருந்தனர்.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையில் காத்திருந்த மக்களில் சிலருக்கு எரிவாயு கிடைத்தது. ஆனால், காத்திருந்த பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இதனிடையே, சில வர்த்தகர்கள் எரிவாயுவை பதுக்கி வைத்திருந்து அதிக விலைக்கு விற்கும் சூழல் ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் விசனம் வெளியிட்டனர்.

அதிக விலை கொடுத்து வசதி படைத்தவர்கள் எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதால் தாம் பாதிக்கப்படுவதாகவும் மக்கள் கவலை வெளியிட்டனர். (ஐ)



# மேற்கு நாடுகளுக்கு ரஷ்யா அச்சுறுத்தல்

மொஸ்கோ, ஏப். 02

ரூபிள்களில் செலுத்த மறுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கு இயற்கை எரிவாயு விநியோகத்தை நிறுத்தும் அச்சுறுத்தலை ரஷ்யா இரட்டிப்பாக்கியுள்ளது.

ஏற்கனவே தங்களிடம் ரஷ்ய நாணயமான ரூபிள்களை கொண்டுதான் எரிவாயு வாங்க வேண்டும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் கூறியிருந்தார்.

ஆனால், நேற்று வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த விதி இருப்பதால், அப்படி செய்யா விட்டால் ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்படும் என புடின் எச்சரித்துள்ளார்.



இதற்காக ரஷ்ய வங்கிகளில் சிறப்பு கணக்கு தொடங்கப்படும், அவற்றின் மூலம் வெளிநாட்டு பணம், ரூபிள்களாக மாற்றப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து புடின் கூறுகையில், 'யாரும் எங்களுக்கு இலவசமாக தரவில்லை. நாங்கள் தொண்டு செய்யவும் போவதில்லை. எனவே ஒப்பந்தங்கள் நிறுத்தப்படும்' என கூறினார்.

அத்துடன், ஜனாதிபதி விளாடிமிர் புடின் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஒரு ஆணையில் கையெழுத்திட்டார். இது நட்பற்ற நாடுகளிலிருந்து இயற்கை எரிவாயு வாங்குபவர்கள் ரஷ்யாவின் மூன்றாவது பெரிய வங்கியான காஸ்ப்ரோம்பேங்கில் கணக்கு வைத்திருக்க வேண்டும் மற்றும் ஒப்பந்தங்களை ரூபிள்களில் தீர்க்க வேண்டும். இது நேற்று முதல் அமுலுக்கு வந்தது.

ரஷ்யாவின் எரிவாயுவை பெரிய அளவில் நம்பியுள்ள ஜேர்மனி, இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கு இந்த செய்தி பெரும் அழுத்தத்தை அதிகரித்துள்ளது. (அ)

# தவறாக வழி நடத்தப்படுகின்றார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்

## அமெரிக்கா குற்றச்சாட்டு

நியூயோர்க், ஏப். 02

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அவரது ஆலோசர்களால் தவறாக வழி நடத்தப்படுவதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

உக்ரைனில் ரஷ்யாவின் போர் எவ்வளவு மோசமான நிலையில் உள்ளது என்பதை புடினிடம் சொல்ல அவர்கள் அஞ்சுகின்றனர்.

அத்துடன், ரஷ்ய பொருளாதாரத்தில் மேற்குலக நாடுகளின் பொருளாதாரத் தடைகள் எத்தனை பெரிய தாக்கத்தை செலுத்துகின்றன என்ற தகவலும் முழுமையாக புடினுக்கு தெரிவிக்கப்படவில்லை என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

ரஷ்ய இராணுவத்தால் தவறாக வழி நடத்தப்பட்டதாக புடின் உணர்ந்துள்ளார் என்பதை அமெரிக்க அறிந்துள்ளது. இதனால் புடினுக்கும் அவரது இராணுவத் தலைமைக்கும் இடையே சுமூகமான சூழல் இல்லை என வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கேட் பெடிங் பீல்ட் தெரிவித்துள்ளார்.




உக்ரைன் மீதான புடினின் போர் ஒரு மூலோபாய தவறாகும். இது ரஷ்யாவை பலவீனப்படுத்தி உள்ளது. அத்துடன், உலக அரங்கில் ரஷ்யா தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என அவர் கூறினார்.

இதேவேளை, உக்ரைன் போர் தொடர்பான உண்மைத் தகவல்களை ஆலோசகர்கள் வழங்குகாதது அசௌகரியமானது என பென்டகன் செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி தெரிவித்துள்ளார். இது உண்மை நிலை அறிந்து மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளுக்கு ஊறு விளைவிக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

புடின் போன்ற ஒரு தலைவர் போர் தொடர்பான மோசமான செய்தியை பெற்று அதற்கு எவ்வாறு எதிர்வினையாற்றுவார்? என்ற அச்சமும் அவரது ஆலோசகர்களுக்கு இருக்கலாம் எனவும் ஜோன் கிர்பி சுட்டிக் காட்டினார்.

இதற்கிடையே, உக்ரைனில் உள்ள ரஷ்ய துருப்புக்கள் மனச்சோர் வடைந்துள்ள தாகவும், போர்த் தளபாடங்கள் குறைவாக இருப்பதாகவும், உத்தரவுகளை நிறைவேற்ற மறுப்பதாகவும் பிரிட்டிஷ் உளவுத்துறை கூறுகிறது.

சில நேரங்களில் தங்களுக்கான கட்டளைகளை ரஷ்ய படைகளை மதிக்காமல், தங்களின் விமானங்களையே சுட்டு வீழ்த்துவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)

# துனீசிய பாராளுமன்றத்தை கலைக்க ஜனாதிபதி உத்தரவு!

துனிஸ், ஏப். 02

வடமேற்கு ஆபிரிக்க நாடான துனிசியாவில் பாராளுமன்றத்தைக் கலைக்க, ஜனாதிபதி காய்ஸ் சயீது உத்தரவிட்டுள்ளார்.

அவருக்கு அளவுக்கு அதிகமான அதிகாரத்தை அளிக்கும் பல்வேறு நடவடிக்கைகளை செல்லாததாக அறிவிக்க எதிர்க்கட்சிகள் முடிவு செய்ததைத் தொடர்ந்து அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

துனீசியாவில் பொதுமக்களின் கடுமையான போராட்டத்தைத் தொடர்ந்து கடந்த 2011ஆம் ஆண்டில் சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்ட ஜனநாயக அரசாங்கம் அமைக்கப்பட்டது.

எனினும், பொருளாதார நெருக்கடியையும் போராட்டங் களையும் காரணம் காட்டி, நாடாளு மன்றத்தை ஜனாதிபதி காய்ஸ் சயீது முடக்கினார். மேலும், அவருக்கு கூடு தல் அதிகாரம் அளிக்கக் கூடிய பல் வேறு உத்தரவுகளையம் சயீது பிறப்பித்தார்.

துனீசியாவில் பொதுமக்களின் கடுமையான போராட்டத்தைத் தொடர்ந்து கடந்த 2011ஆம்



ஆண்டில் சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்ட ஜனநாயக அரசாங்கம் அமைக்கப்பட்டது.

எனினும், பொருளாதார நெருக்கடியையும் போராட்டங் களையும் காரணம் காட்டி, பாராளுமன்றத்தை ஜனாதிபதி காய்ஸ் சயீது முடக்கினார். மேலும், அவருக்கு கூடுதல் அதிகாரம் அளிக்கக் கூடிய பல்வேறு உத்தரவுகளையும் சயீது பிறப்பித்தார்.

இந்தச் சூழலில், ஜனாதிபதியின் இந்த உத்தரவுகளை செல்லாததாக்க எதிர்க்கட்சிகள் நடத்திய காணொளி மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. அதையடுத்து, பாராளுமன்றத்தை ஒரேடியாகக் கலைத்து காய்ஸ் சயீது உத்தரவிட்டுள்ளார். (அ)

# உளவு செயற்கைக் கோளை ஏவி தென்கொரியா சாதனை!

சியோல், ஏப். 02

திட எரிபொருளில் இயங்கும் ரொக்கட்டில் உளவு செயற்கைக் கோளை ஏவி தென் கொரியா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.



இதன் மூலம் விண்வெளி கண்காணிப்பில் தென் கொரியா முக்கிய மைல் கல்லை எட்டியுள்ளதாக தென் கொரியா பெருமைக் கொண்டுள்ளது.

இந்தச் சோதனை தென் கொரிய இராணுவ அமைச்சர் சூ வூக் முன்னிலையில் தலைநகர் சியோலில் இருந்து 150 கிலோமீற்றர் தொலைவில் உள்ள டேன் என் எனும் பகுதியில் நடத்தப்பட்டது.

இது குறித்து தென் கொரிய இராணுவ அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இது நமது இராணுவத்தில் ஒரு மைல்கல். அதுமட்டுமல் விண்வெளி ஆராய்ச்சிகளில் சுதந்திரமான முயற்சி. இதனால் நமது கண்காணிப்பு திறனும் அதிகரிக்கும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை தென் கொரியாவுக்கு தனியாக உளவு செயற்கைக் கோள்கள் இல்லை. அமெரிக்காவின் செயற்கைக்கோள் தரவுகளையே பயன்படுத்தி வந்தது. இந்நிலையில், இந்த சோதனையை தென்கொரியா வெற்றியாகக் கருதுகிறது.

திரவ எரிபொருள் ரொக்கெட்டுகளை ஒப்பிடும் போது திட எரிபொருள் ரொக்கெட்டுகளை தயாரிப்பது எளிது. அதன் கட்டமைப்பு அதிக சிக்கல் இல்லாதது. அதேபோல், அதன் உற்பத்தி செலவும் குறைவு. அதை விண்ணில் ஏவுவதற்கான நேரமும் ஒப்பீட்டு அளவில் குறைவு. இதனாலேயே முதன்முறையாக முற்றிலுமாக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட திட எரிபொருள் ரொக்கெட் மூலம் உளவு செயற்கைக் கோளை ஏவியுள்ளதை தென் கொரியா முக்கியமானதாகக் கருதுகிறது. (அ)

# ரஷ்யா படையெடுக்காது என நம்பிய பிரான்ஸின் கணிப்புத் தோல்வியா?

## உளவுப் பணிப்பாளர் பதவி விலகல்!

பரிஸ், ஏப். 02

பிரான்ஸின் இராணுவத்தின் புலனாய்வுப் பணிப்பாளர் பதவி விலகியுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜெனரல் எரிக் விடாட் கடந்த ஆண்டு நடுப் பகுதியிலேயே புலனாய்வுத் துறைப் பணியகத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

"போதிய விளக்கம் அளித்தல் மற்றும் துறைசார் அனுபவக்குறைவு" போன்ற விமர்சனங்கள் அவர் மீது எழுந்துள்ளன என்று பாரிஸ் செய்தி ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. ஆனால் அவரது பதவி விலகலை இராணுவத் தலைமை இன்னமும் உறுதிப்படுத்த வில்லை.

எல்லையில் படைகளைக் குவிக்கத் தொடங்கிய ஆரம்பத்திலிருந்தே ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமிக்கப் போகின்றது என்பதை அமெரிக்கா மற்றும் பிரிட் டன் புலனாய்வு சேவைகள் தொடர்ந்து எச்சரித்து வந்தன. ஆனால் பிரான்ஸின் உளவுத்துறை போர் மூளப் போகிறது என்பதற்கான சாத்தியங்களைக் குறைவாகவே மதிப்பிட்டிருந்தது என்று சொல்லப்படுகிறது.

கடந்த ஆண்டு ஜெனரல் எரிக் பதவிக்கு வந்த சில நாட்களிலேயே ஆஸ்திரேலியாவுடனான நீர்மூழ்கி விவகாரத்தில் பாரிஸ் ஏமாற்றமடைய நேரிட்டது.பல பில்லியன் பெறுமதியான ஒப்பந்தத்தில் ஆஸ்திரேலியா பிரான்ஸின் காலை வாரவுள்ளது என்பதை முன்கூட்டியே மதிப்பிடுவதில் பிரான்ஸின் உளவுத்துறை தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை அவர் அச்சமயம் எதிர் கொள்ள நேரிட்டது.

ஆயினும் ஜெனரல் எரிக் விடாட்டின் பதவிக்குரிய பணி நாட்டின் படை நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டதே தவிர வெளிநாடுகளது போர்களை எதிர்வு கூறுவது அல்ல என்று வேறு சில இராணுவ வட்டாரங்கள் ஏஎப்பி செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளன.

ரஷ்யாவின் படையெடுப்புக்கு இராணுவப் புலனாய்வுப் பொறுப்பாளர் மீது குறை சுமத்துவது இலகுவானது. ஆனால் உண்மையில் அதற்கான பொறுப்பைச் சகல உளவு சேவைகளின்சமூகமே ஒட்டு மொத்தமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இராணுவ ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார். (அ)




# வடக்கின் பெரும்போர் 7,8,9 ஆம் திகதிகளில்!

யாழ்ப்பாணம், ஏப். 02

வடக்கின் பெரும்போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் சென். ஜோன்ஸ் கல்லூரி பாடசாலை அணிகளுக்கிடையான 115ஆவது பெருந்துடுப்பாட்ட போட்டி 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கொரோனா பெரும்தொற்று காரணமாக கடந்த வருடம் இப்போட்டிகள் எதுவும் நடைபெறாத சூழ்நிலையில் இந்த ஆண்டு பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் இரு கல்லூரி அணிகளும் மோதவுள்ளன.

இரு கல்லூரி அணிகளும் சமபலம் கொண்டவையாக உள்ளமையால் இம்முறை போட்டி மிகவிறுவிறுப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)




# சதத்தில் அஸாம் புதிய சாதனை!

லாகூர், ஏப். 01

ஒருநாள் கிரிக்கெட்டில் குறைந்த இனிங்ஸில் 15 சதங்கள் அடித்த வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார் பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் ஆஸம்.

லாகூரில் நடைபெற்ற அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2ஆவது ஒருநாள்

ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் பாபர் அஸாம் 11 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 114 ஓட்டங்களைக் குவித்தார்.

ஒருநாள் கிரிக்கெட்டில் குறைந்த இன்னிங்ஸில் 15 சதங்கள் அடித்த வீரர் என்கிற சாதனையை படைத்துள்ளார் பாபர் ஆஸம். ஆம்லா இதற்கு முன்பு 86 இனிங்ஸில் எடுத்த சாதனையை 83

இனிங்ஸில் எடுத்து சாதித்துள்ளார்.

இவருக்கு முன்னர், ஆம்லா 86 இனிங்ஸ், விராட் கோலி - 106 இனிங்ஸ், வோர்ணர் 108 இனிங்ஸ், தவான் 108 இனிங்ஸ்களில் இந்த சாதனைகளை படைத்துள்ளனர்.

# சென்னை சுப்பர் கிங்ஸுக்கு அதிர்ச்சி கொடுத்தது லக்னோ!

மும்பை, ஏப். 02

நடப்பு சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை 6 விக்கெட்களால் வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்தது லக்னோ அணி. ஐ. பி. எல். இருபது - 20 தொடரில் நேற்று முன்தினம் இரவு நடந்த போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் லக்னோ அணியும் மோதின.

சென்னை அணி நிர்ணயித்த 210 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணி, குயின்ரன் டி கொக், எல்வின் லூயிஸ் ஆகிய இருவரின் அதிரடி அரை சதங்களின் உதவியுடன் 19.3 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 211 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

இதுவரை நடந்து முடிந்த ஏழு போட்டிகளில் 6இல் இரண்டாவதாக துடுப்பெடுத்தாடிய அணி வெற்றி பெற்றுள்ளது. அத்துடன், அறிமுக அணிகளில் ஒன்றான லக்னோ அணி ஈட்டிய முதலாவது வெற்றி இதுவாகும்.

ஆரம்ப வீரர்களான கே. எல். ராகுல், குயின்ரன் டி கொக் ஆகிய இருவரும் 62 பந்துகளில் 99 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த தொடக்கத்தை இட்டுக் கொடுத்தனர்.

கே. எல். ராகுல் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த சொற்ப நேரத்தில் மனிஷ் பாண்டே 5 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

தொடர்ந்து குயின்ரன் டி கொக் 61 ஓட்டங்கள், தீபக் ஹூடா 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இதனைத் தொடர்ந்து 16 பந்துகளில் வெற்றிக்கு மேலும் 40 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

எல்வின் லூயிஸ், ஆயுஷ் படோனி ஆகிய இருவரும் பிரிக்கப்படாத 6ஆவது விக்கெட்டில் 13பந்துகளில் 40 ஓட்டங்களைப் பகிர்ந்து லக்னோ வெற்றியை உறுதிசெய்தனர்.

23 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்ட லூயிஸ் 6 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களையும் படோனி 9 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ட்வேன் ப்ரிட்டோரியஸ் 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட சென்னை சுப்பர் கிங்ஸ் 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 210 ஓட்டங்களைக் குவித்தது.

ஆரம்ப விக்கெட்டில் 28 ஓட்டங்களை ரொபின் உத்தப்பாவுடன் பகிர்ந்த ருதுராஜ் கெய்க்வாட் ஓர் ஓட்டத்தை மாத்திரம் பெற்று ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து உத்தப்பா (50), மொயீன் அலி (35) ஆகிய இருவரும் 30 பந்துகளில் 56 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு தெம்பூட்டினர்.




அவர்கள் இருவரும் 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டமிழந்த பின்னர் 4ஆவது விக்கெட்டில் இணைந்த ஷிவம் டுபே (49), அம்பதி ராயுடு (27) ஆகிய இருவரும் 60 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு மேலும் பலம் சேர்த்தனர்.

அணித் தலைவர் ரவீந்திர ஜடேஜா 17 ஓட்டங்களையும் எம். எஸ். டோனி ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

லக்னோ அணியின் பந்துவீச்சில் ரவி பிஷ்னோய் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ஆவேஷ் கான் 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் அன்ட்ரூ ரை 40 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

# ஆஸிக்கு எதிரான போட்டியில் பாகிஸ்தான் சாதனை வெற்றி!

லாகூர், ஏப். 02

லாகூர் கடாபி விளையாட்டரங்கில் கணிசமான மொத்த ஓட்டங்கள் குவிக்கப்பட்டதும் 2 அணிகளிலும் 3 சதங்கள் பெறப்பட்டதுமான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியாவை 6 விக்கெட்களால் பாகிஸ்தான் வெற்றிகொண்டது.

இரண்டாவது போட்டியில் ஈட்டப்பட்ட இந்த வெற்றியுடன் 3 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரை பாகிஸ்தான் 1 - 1 என சமப்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியா நிர்ணயித்த 349 ஓட்டங்களானது பாகிஸ்தான் இரண்டாவதாக துடுப்பெடுத்தாடி பெற்ற சாதனைமிகு அதி கூடிய எண்ணிக்கையாகும். இதற்கு முன்னர் பங்களாதேஷால் 2014 ஆசிய கிண்ணத்தில் நிர்ணயிக்கப்பட்ட 327 ஓட்டங்களே பாகிஸ்தான் எட்டிப்பிடித்த அதிகூடிய வெற்றி இலக்காக இருந்தது.

அவுஸ்திரேலியா சார்பாக பென் மெக்டர்மட் கன்னிச் சதம் குவித்த போதிலும் பாகிஸ்தான் சார்பாக இமாம்-உல்-ஹக், அணித் தலைவர் பாபர் அஸாம் ஆகியோர் குவித்த சதங்கள் அதனை வீண்போகச் செய்தன.

இரண்டு அணிகளிலும் அரோன் பிஞ்சைத் தவிர ஏனைய முன்வரிசை வீரர்கள் துடுப்பாட்டத்தில் அபார ஆற்றல்களை வெளிப்படுத்தியிருந்தனர்.




அந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 348 ஓட்டங்களைக் குவித்தது.

அணித் தலைவர் அரொன் பின்ஞ் 3ஆவது பந்தில் ஓட்டம் பெறால் ஆட்டம் இழந்தபோதிலும் ட்ராவிஸ் ஹெட், பென் மெக்டர்மட் ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டில் 162 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை வீழ்ச்சியிலிருந்து மீட்டனர்.

ட்ராவிஸ் ஹெட் 6 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்களுடன் 89 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்த பின்னர் பென் மெக்டர்மட், மார்னுஸ் லபுஷான் ஆகிய இருவரும் 3ஆவது விக்கெட்டில் 74 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

மெக்டர்மட் 10 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 104 ஓட்டங்களையும் லபுஷான் 59 ஓட்டங்களையும் பெற்றனர், அவர்களைத் தொடர்ந்து மார்க்கஸ் ஸ்ரொய்னிஸ் 49 ஓட்டங்களைப் பெற்றார்.

பாகிஸ்தான் பந்துவீச்சில் ஷஹீன் ஷா அப்ரிடி 63 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 49 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 349 ஓட்டங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியது.

பக்கார் ஸமான், இமாம்-உல்-ஹக், பாபர் அஸாம் ஆகியோரின் அதிரடி துடுப்பாட்டங்கள் பாகிஸ்தானை இலகுவாக வெற்றிபெறச் செய்தன.

பக்கார் ஸமான் 64 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 67 ஓட்டங்களைப் பெற்றதுடன் இமாம்-உல்-ஹக்குடன் ஆரம்ப விக்கெட்டில் 118 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

2ஆவது விக்கெட்டில் பாபர் அஸாமுடன் மேலும 109 ஓட்டங்களைப் பகிர்ந்த இமாம்-உல்-ஹக் 97 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 106 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

பாபர் அஸாம் 83 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 11 பௌண்ட்ரிகள் ஒரு சிக்ஸருடன் 114 ஓட்டங்களைக் குவித்தார்.

அவர்களைவிட முஹமட் ரிஸ்வான் 23 ஓட்டங்களையும் குஷ்தில் ஷா ஆடடமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

அவுஸ்திரேலிய பந்துவீச்சில் அடம் ஷம்பா 71 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

# ஜனாதிபதிக்கு தகுந்த பதிலடி!

## கூறுகிறார் இராதாகிருஷ்ணன்

கொழும்பு, ஏப். 02

நான் தான் நன்றாக செய்தேன் என்று கூறிய ஜனாதிபதிக்கு மக்கள் தக்க பதில் வழங்கியுள்ளார்கள். இதனை புரிந்துகொண்டு எதிர்கால நடவடிக்கைகளை ஜனாதிபதி திட்டமிட வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை அரசியல் வரலாற்றில் முதன்முறையாக ஒரு ஜனாதிபதியின் வீட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியது இதுவே முதல் முறையாகும். அதற்கு காரணம் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல் காரணமாக மக்கள் எந்தளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதையே அது எடுத்துக்காட்டுகின்றது.

ஜனாதிபதிக்கு எதிராக அவரின் பதவியிலிருந்து வெளியேறுமாறு போராட்டத்தில் ஈடுப்பட்டவர்களில் அனேக மானவர்கள் இளைஞர்களே. இதே இளைஞர்கள் தான் அன்று கோட்டாபய ஜனாதிபதியாக வரவேண்டும் என்று முன்னின்று வாக்களித்தார்கள். ஆனால் இன்று அதே இளைஞர்கள் ஜனாதிபதியை பதவி விலகி வீட்டிற்கு செல்ல வேண்டும் என்று கோஷம் இடுகின்றார்கள் அந்தளவிற்கு இளைஞர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஜனாதிபதிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டமானது எந்தவிதமான அரசியல் கட்சிகளின் தலைமையிலோ அல்லது பொது அமைப்புகளின் தலைமையிலோ இல்லாமல் மக்களாகவே முன்வந்து இந்த ஆரப்பாட்டத்தை முன்னெடுத்திருக்கின்றார்கள். இது போன்ற இன்னும் பல போராட்டங்கள் இடம்பெறும். எனவே இதை புரிந்து கொண்டு ஜனாதிபதி உரிய தீர்வினை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# தற்போதைய பிரச்னைக்கு யாரிடமுமே தீர்வு இல்லை!

## சொல்கிறார் அங்கஜன் எம்.பி.

கொழும்பு, ஏப். 02

**தற்போதைய பிரச்னைக்கு எந்த அரசிடமும் எந்த தலைவரிடமும் உடனடி தீர்வு இல்லை. தற்போதுள்ள சிக்கலுக்குள் தீர்வு பெற வேண்டுமாக இருந்தால் நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும் எனவும் வன்முறை இல்லாமல் போராட்டங்களை மேற்கொண்டே தீர்வை பெறலாம் எனவும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.**

நேற்று ஊரெழுவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது ஜனாதிபதியின் இல்லம் முற்றுகையிடப்பட்டமை தொடர்பாக மஅருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



நேற்று ஒரு சில அசாதாரண சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மிகப்பெரிய சவாலான நிலைமை இன்று இலங்கையில் ஏற்பட்டிருக்கின்றது. விலைவாசிகள் உயர்ந்துள்ளது. எரிபொருளுக்கு தட்டுப்பாடு, மின்சாரம் இல்லை, வாழ்வாதாரம் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு இருக்கின்றது. இது மக்களின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கின்றது. இயல்பு வாழ்க்கைக்கு பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இது மிகவும் கஷ்டமான விடயம்.

ஆனாலும் யாழ்.மாவட்ட மக்களை பொறுத்தவரை இது புதிதல்ல. இது தெற்கு மக்களுக்கு புதியதொரு சம்பவமாகவே இருக்கும். நேற்று (வியாழன்) அதற்காக ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்று அது வன்முறையாக மாறி இருக்கின்றது.

கடந்த காலத்தில் நாங்கள் வன்முறையில் இருந்து வந்த மக்கள். மீண்டும் அதனை நோக்கிப் போகக்கூடாது என்பது என்னுடைய விருப்பம். மக்களுடைய போராட்டத்தின் வேதனையை உணரக்கூடியதாக இருக்கின்றது. போராட்டத்தை அமைதியாக செய்யவேண்டும். வன்முறை இல்லாமல் போராட்டங்களை செய்து தீர்வை நோக்கிச் செல்ல முடியும்.

எந்த அரசிடமும் எந்த தலைவரிடமும் உடனடி தீர்வு இல்லை. தற்போதுள்ள சிக்கலுக்குள் தீர்வு பெறவேண்டுமாக இருந்தால் நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து எங்களால் முடிந்த ஆலோசனைகளை முயற்சிகளை வழங்கி ஒரு தீர்வை காண வேண்டுமே தவிர வன்முறை ஒருபோதும் தீர்வா காது.

யாருக்கும் வக்காலத்து வாங்கவேண்டிய அவசியம் இல்லை. யாருடைய உதவியாலும் மக்களால் நான் தெரிவு செய்யப்படவில்லை. மக்களால் மட்டுமே நான் தெரிவு செய்யப்பட்டேன். எந்த ஒரு அரசாங்கத்திற்கும் தலைவருக்கு வக்காலத்து வாங்கவேண்டியது எனது நோக்கமல்ல. தற்போதுள்ள பிரச்னையை தீர்ப்பதற்கு என்னால் முடிந்த அனைத்து ஒத்துழைப்புகளையும் நான் செய்யத் தயாராக இருக்கிறேன்-என்றார். (அ)

# மிரிஹான போராட்டத்தின் பின்னணியில் ஜே.வி.பி!

## பிரசன்ன ரணதுங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 02

நுகேகொடை மிரிஹானவில் நேற்று முன்தினம் இரவு நடந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மக்களின் சுயாதீனமான ஆர்ப்பாட்டம் எனக் கூறினாலும் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அதன் பின்னணியில் இருப்பதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஜனாதிபதியின் ஊடக மத்திய நிலையத்தில் நேறரு இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.



கடந்த 2015 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட் டியல் வேட்பாளராக முன்வைக் கப்பட்ட ஒருவர் அந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண் டமைக்கான புகைப்படங்கள் அரசாங்கத்திடம் இருக்கின்றது.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோருக்கு எந்தத தடைகளையும் ஏற்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி ஆலோசனை வழங்கி இருந்தார்.

எனினும் நேற்று முன்தினம் நள்ளிரவு ஒரு மணியளவில் பொதுச் சொத்துக்களுக்கு சேதங்களை ஏற்படுத்தியதால், குறைந்த பலத்தை பயன்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். (அ)

# மிரிஹான சம்பவம் குறித்த விசாரணைகள் சி.ஐ.டியிடம்

கொழும்பு, ஏப். 02

நுகேகொடை, மிரிஹான ஆர்ப்பாட்டம் தொடர்பான விசாரணை, குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் பொறுப்பேற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுகேகொடை மிரிஹான, பெங்கிரிவத்தை பகுதியில் உள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லம் அமைந்துள்ள வீதியில் நேற்று முன்தினம் இரவு பொதுமக்கள் கூடி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

ஆர்ப்பாட்டம் தொடர்பில் 54 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொறுப்பு கூறுவதற்கு எவருமே அற்ற போராட்டங்களில் அவதானம் தேவை

## சுட்டிக்காட்டுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஏப். 02

பொறுப்பு கூறுவதற்கு எவரும் அற்ற ஒழுங்கமைக்கப்படாத போராட்டங்களில் கலந்து கொள்ளும்போது விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் செயற்படுமாறு மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள போரட்டங்கள் தொடர்பில் ஜே.வி.பி. வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் பாரதூரமான நெருக்கடி நிலைமையே நிலவுகிறது என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். ஒவ்வொரு கணமும் சமூகத்திலுள்ள அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறானதொரு தருணத்தில் அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் ஏனையோர் இந்த அடக்குமுறைக்கு எதிராக உணர்வுபூர்வமாகவும் அமைப்பு ரீதியாகவும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நெருக்கடிகளுக்கு எதிராகப் போராடுவதற்கு அமைப்புக்களுக்கும் இயக்கங்களுக்கும் பொது மக்களுக்கும் உரிமை உண்டு.

ஆனால், எந்தப் பொறுப்பும், அமைப்பாளரும் இல்லாத, ஒழுங்கமைக்கப்படாத போராட்டங்களில் கலந்து கொள்பவர்களை விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். ஏனெனில் இதுபோன்ற பொறுப்பு கூறுவார் அற்ற பொதுப் போராட்டங்களுக்குப் பின்னால் கூட ஆபத்து இருக்கலாம்.

அதேவேளை சுயமாக முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களில் இலாபம் தேடும் வகையில் மக்கள் விடுதலை முன்னணி ஒருபோதும் செயல்படாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்-என்றுள்ளது. (அ)

## வியுக்தியார் பதில்கள்



வாராவாரம் உங்கள் கேள்விகளுக்கு வியுக்தியார் பதிலளிக்கவிருக்கிறார். அது அரசியல், சமூகம், சமயம் என்று எந்த துறையில் உங்களுக்கு சந்தேகம்இருந்தாலும் கேள்விகளை அனுப்புங்கள். வியுக்தியார் தனக்கே உரிய பாணியில் பதில் தருவார்.

கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:

வியுக்தியார் பதில்கள்,
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

ஈழநாடு



## கூட்டமைப்பில்...

பின்னர் கருத்து தெரிவித்த சுமந்திரன் எம்.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ரெலோ வெளியேறினால் சந்தோசமடைவேன் எனக் கூறியிருந்தார்.

இந்த நிலையில், எம்.ஏ.சுமந்திரனின் கருத்துக்கு ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பதிலளித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழீழ விடுதலை இயக்கம் விலகிச் சென்றால் தமிழ் அரசுக் கட்சி சந்தோசப்படும் என சுமந்திரன் தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகி, 10 வருடங்களின் பின்னரே சுமந்திரன் கட்சிக்குள் வந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் ரெலோ முக்கிய பங்காற்றியிருந்தது. கிழக்கில் உள்ள தமிழ் அரசுக் கட்சியின் பிரமுகர்கள் பலருக்கும் அது தெரியும்.

ஆயுதப் போராட்டத்தை வன்முறையென சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். வன்முறையை ஏற்கவில்லையென்றும் குறிப்பிட்டார்.

சுமந்திரன் வன்முறையெனக் குறிப்பிடும் வே.பிரபாகரனின் ஆசீர்வாதத்துடனேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அந்தக் கூட்டமைப்பில் சுமந்திரன் எப்படி அங்கம் வகிக்க முடியும்.

இதேவேளை, சுமந்திரனின் கருத்து தமிழ் அரசுக் கட்சியின் கருத்தா என்பதை அந்தக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும், சுமந்திரனின் கருத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தை என்பதை இரா.சம்பந்தன் தெளிவுபடுத்தவேண்டும்.

போராட்டத்திலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திலும் ஒரு துளியளவு பங்களிப்பையும் செலுத்தாதவர் சுமந்திரன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அனைவருக்கும் முன்பாகவே எமது முடிவை அறிவித்தோம். எமது முடிவு ஜனநாயக ரீதியிலானது என இரா.சம்பந்தனும் தெரிவித்திருந்தார்.

சுமந்திரன் பல தடவைகள் சீண்டிய போதும், நாம் உருவாக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக மௌனம் சாதித்தோம். இப்பொழுது சுமந்திரன் சொன்ன கருத்து பாரதூரமானது. அதற்கு பதிலடி கொடுப்போம்.

எம்மைத் துரோகிகள் போல சுமந்திரன் பொய்யான கருத்தை தெரிவித்திருந்தார். நாம் துரோகிகளாக புலிகளால் பார்க்கப்பட்டிருந்தால், கூட்டமைப்பை உருவாக்கும் பணியை புலிகள் எம்மிடம் தந்திருக்கமாட்டார்கள்.

விடுதலைப் புலிகளும், ரெலோவும் எப்படி அந்நியோன்யமாக செயற்பட்டார்கள் என்பது வரலாறு தெரிந்தவர்களுக்கும், விடுதலைப் புலிகளின் மூத்த போராளிகளுக்கும் நன்கு தெரியும். வவுனியாவில் புலிகளுடன் சேர்ந்து செயற்படுவதாக கூறி, எமது உறுப்பினர்களும், அலுவலகங்களும் தாக்கப்பட்டிருந்தன.

எம்மையும் புலிகளையும் பற்றி பேசும் தகுதி சுமந்திரனுக்கு கிடையாது -என்றார். (அ)

## கொழும்பு...

நேற்று களுத்துறை மாவட்டத்துக்கும் போராட்டங்கள் பரவியிருந்த நிலையில் நள்ளிரவு 12 மணி முதல் இன்று காலை 6 மணி வரையில் மேல் மாகாணம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

நேற்றைய தினம் உச்சக்கட்ட பாதுகாப்புகளுக்கு மத்தியிலும் பல்வேறு இடங்களிலும் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

மொரட்டுவை நகரப் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அந்த நகரத்தின் முதல்வரின் இல்லத்தின்மீது கல்வீச்சு தாக்குதலை நடத்தினர். இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்படவே அங்கு விசேட அதிரடிப் படை பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இதேசமயம் மொரட்டுவை நகரின் காலி வீதியில் மறித்தும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்கள் வீதியை மறித்தபோதும் பாடசாலை வாகனங்கள், அம்புலன்ஸ்களை அவ்வழியே பயணிக்க அனுமதித்துடன், தமது எதிர்ப்பை தொடர்ந்து வெளிப்படுத்தினர்.

இதேபோன்றதொரு போராட்டம் நேற்றிரவு கொழும்பு தாமரை தடாகப் பகுதியிலும் இடம்பெற்றது.

இதேவேளை, களுத்துறை - பேருவளையிலும் மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தால் பேருவளை நகரத்தின் ஒருபகுதி முடக்கப்பட்டது.

இது தவிர கொழும்பு முழுவதும் பாதுகாப்பு கடுமையாக்கப்பட்டுள்ளது. பெருமளவு பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர். எனினும், மக்கள் சிறியளவிலும் கூட்டமாகவும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

இந்தப் போராட்டங்களின்போது, “கோட்டாபய வீட்டுக்கு போ”, விலையேற்றத்தை குறை, பொருட்களுக்கான தட்டுப்பாட்டை நீக்கு என்ற கோஷங்களை வலியுறுத்தினர்.

இதேசமயம், நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற போராட்டங்களால் 39 மில்லியன் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார். (ஐ)

## அடிப்படைவாத...

லும் அரபு வசந்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற பிரசாரமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

“இரும்புக் கட்டைகள், பொல்லுகள் மற்றும் ஆயுதம் ஏந்திய கும்பல், ஆர்ப்பாட்டக்காரர்களை தூண்டிவிட்டு மிரிஹான பங்கிரிவத்தையில் உள்ள ஜனாதிபதியின் இல்லத்தை நோக்கி பேரணியாகச் சென்று கலவரத்தை ஏற்படுத்தியுள்ளது.

வன்முறையில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் திட்டமிட்ட அடிப்படைவாதிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் நாட்டில் அரபுக் காடுகளை உருவாக்க வேண்டும் என்ற பிரசாரத்தை முன்னெடுத்துள்ளனர்.

சமூக ஊடகங்களை அநாமதேயமாகப் பயன்படுத்தி மக்களைத் தூண்டிவிட்டு நாட்டைச் சீர்குலைக்கும் நோக்கில் இந்தக் கலவரம் நடத்தப்பட்டுள்ளது என கைது செய்யப்பட்டவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர் ” - என ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## நிழல்...

வுக்கு 11 கட்சிகள் கொண்ட கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் விமல் வீரவன்ஸ நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்றில் அனைத்துக் கட்சிகளின் ஒருமித்த கருத்துடன் பொருளாதார திட்டம் வகுக்கப்பட வேண்டும். அவற்றை நடைமுறைப்படுத்த அரசமைப்பு சட்டத்தின்படி புதிய அமைச்சரவை நியமிக்கப்பட வேண்டும் - என்றார்.

இதன்போது, கருத்துரைத்த நிழல் அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் தேர்தல் அறிவிக்கப்பட வேண்டும் என்று உதய கம்மன்பில தெரிவித்தார்.

மக்கள் பட்டினியிலும், இருளிலும் தவிக்கும் நிலையில் கடன் சேவைக்காக 700 கோடி டொலர்களை செலவிட அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அவர் குற்றஞ்சாட்டினார். கடனை திருப்பி செலுத்துவதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# 6 பேருக்கு மறியல் 48 பேருக்கு பிணை!

கொழும்பு, ஏப். 02

மிரிஹான போராட்டத்தில் பங்கேற்ற 6 சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்நிலையில், ஏனைய 48 சந்தேக நபர்களுக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கைதானவர்களுக்காக 400இற்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் தாமாகவே வழக்குக்கு முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அவசரகால...

யில் அரச வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது

அவசரகால சட்டத்தின் மூலம் பிடியாணையின்றி கைதானோரை காவலில் வைக்கவும், சொத்துக்களை முடக்கவும் எந்தவொரு இடத்திலும் நுழைந்து சோதனை செய்வதற்கும் சட்டங்களை இடைநிறுத்துவதற்கும் நீதிமன்றால் கேள்விக்கு உட்படுத்த முடியாத உத்தரவுகளை பிறப் பிக்கவும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆர்ப்பாட்டத்தில்...

ஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீசியும் நீர்த்தா ரைப் பிரயோகம் செய்தும் தாக்குதல் நடத்தினர்.

மக்கள் போராட்டம் வெடித்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு அமுல் செய்யப்பட்ட ஊரடங்கு நேற்று அதிகாலை 5 மணி முதல் நீக்கப்பட்டது.

எனினும் நுகேகொடை - மிரிஹான பகுதியில் ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் கொழும்பில் வேறு பகுதிகளிலும் பரவி உள்ளதால் மேலும் ஊடரங்கு விதிக்கப்படும் சாத்தியம் உள்ளதாகக் கருதப்படுகிறது.

அத்துடன், ஏப்ரல் 03 ஆம் திகதி நாடு முழுவதும் தன்னெழுச்சிப் போராட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதால் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் பிராந்திய ரீதியாகவே அல்லது நாடு தழுவிய ரீதியிலோ மீண்டும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படலாம் எனவும் கருதப்படுகிறது. (அ)

## நாளைய...

அத்துடன், இந்தப் பேரணியில் சகல பொது மக்களும் சிவில் சமூக அமைப்புக்களும் கலந்து கொண்டு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

முள்ளிவாய்க்கால் இனப்படு கொலைக்கு பின்னரான தமிழ்மக்க ளின் நீதிக்கான போராட் டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கங்கள் மிகவும் முக்கியமானதும் காத்திரமானதுமான வகிபாகத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

பல்வேறு சிரமங்கள், இடையூறுகள், சவால்களின் மத்தியில் மன உறுதியுடன் தளராமல் அவர்கள் மேற்கொண்டுவரும் போராட்டங்களுக்கு நாம் அனைவரும் எம்மால் இயன்றளவு உடல், உள ரீதியான ஆதரவைக் கொடுப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின்மீது பொலிஸார் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலை கண்டித்தும் நீதிக்காக போராடும் தாய்மார்களின் நியாயமான கோரிக்கையினை வலியுறுத்தும் நோக்கங்களுக்காகவே ஞாயிற்றுக்கிழமை அன்று கண்டன பேரணி யாழ்ப்பாணம் பேருந்து தரிப்பிடத்தில் காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது.

நான் சுகயீனமாக இருப்பதால் என்னால் அன்றைய தினம் கலந்து கொள்ள முடியுமோ தெரியவில்லை. ஆனால், இந்த போராட்டத்தில் எனது கட்சி, உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரையும் மற்றும் பொதுமக்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைப்பு விடுக்கின்றேன். (ஐ)

## அமைச்சுப்...

நேற்றையதினம் அந்தக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடிய மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

இதேவேளை, நிழல் அரசாங்கம் ஒன்றை அமைக்குமாறும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜனாதிபதியிடம் கோரிக்கை வைத்துள்ளது. (ஐ)

## அமைச்சர்களின்...

இதனால் அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

பெருமளவு பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினர் அவ்விடத் தில் குவிக்கப்பட்டுள்ள னர்.

இந்த நிலை யில் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவின் வீட் டைச் சுற்றி வளைத்தும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்று உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் நிலையில் அமைச்சர்களின் வீடுகளுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)



## அரச...

கட்சியினரால் அடித்து விரட்டப்பட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்களான ஹிருணிகா பிறேமச்சந்திர, உமாச்சந்திரா பிரகாஷ் உள்ளிட்டவர்களும் அவர்களின் ஆதவராளர்களும் யாழ்ப்பாணத்தில் நேற்று போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது, அரச ஆதரவு கோஷத்துடன் அருண் சித்தார்த் தலைமையில் சிலர் அந்த கூட்டத்துக்குள் நுழைந்தனர். இதைத் தொடர்ந்து அவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இந்த நிலையில், போராட்டத்தில் பங்கேற்ற ஒருவர் தனது செருப்பை கழற்றி அருணை கன்னத்தில் அறைந்தார். மீண்டும் அவரைத் தாக்க முயன்றபோதும் ஹிருணிகாவின் பாதுகாவலர் அவரைத் தடுத்து விட்டார்.

இந்நிலையில் வேறு சில ஆர்ப்பாட்டாக்காரர்களும் அருணை விரட்டி விரட்டி தாக்கினர். எனினும், பொலிஸாரால் மீட்கப்பட்ட சித்தார்த் உள்ளிட்ட அரசாங்க ஆதரவு தரப்பினர் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பின்னர், பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஐ-3)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்



தோற்றம் 18 - 03 - 1946

மறைவு 31 - 03 - 2022

### திருமதி
### அருந்தவச்செல்வி சிவக்கொழுந்து

யாழ். சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough ஐ வதிவிடமாகவும் கொண்ட அருந்தவச் செல்வி சிவக்கொழுந்து அவர்கள் 31-03-2022 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சட்டநாதர் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற சிவக்கொழுந்து அவர்களின் அன்பு மனைவியும்,சிதம்பரச்செல்வி (இலங்கை), தெய்வராாணி(இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நகுலேஸ்வரன் (கனடா), யோகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), இராஜேஸ்வரி(கனடா), காலஞ்சென்ற இராஜேஸ்வரன், குமரேஸ்வரி(கனடா), புவனேஸ்வரன்(கனடா), ஞானேஸ்வரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும்,ஜெயகலைவாணி(கனடா), சர்மிளா (அவுஸ்திரேலியா), ஜெயராஜசிங்கம்(கனடா), ஏரம்பராஜா(கனடா), சுதாஜினி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்,அருள்நேசன், சிவச்செல்வன், காந்தச் செல்வன், ஐங்கரன் ஆகியோரின் அன்பு பெரியம்மாவும்,சாரணி, மீரா, நிஷாரா, அஞ்சுதன், ரமணன், அஜந்தன், தர்ஷனா, திவாகர், சுஜன், காவியா, அபிரா, நித்தாரா, நாவியா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

பார்வைக்கு
Saturday, 02 Apr 2022 5:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Sunday, 03 Apr 2022 5:30 AM - 7:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Sunday, 03 Apr 2022 8:30 AM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**நகுலேஸ்வரன் - மகன்**
Mobile : +14169940608
**யோகேஸ்வரன் - மகன்**
Mobile : +61425423553
**இராஜேஸ்வரி - மகள்**
Mobile : +16478530814
**அருள்நேசன் - பெறாமகன்**
Mobile : +94753366207
**காந்தச்செல்வன் - பெறாமகன்**
Mobile : +94771043481

தகவல் :
**குடும்பத்தினர்.**



# டீசல் வந்த பின் வீதியை திறவுங்கள் புத்தளத்தில் வீதியை மறித்து போராட்டம்!

*புத்தளம், மார்ச் 02*

மதுரங்குளி பிரதேசத்தில் நேற்றுக் காலை முதல் வாகனங்களுக்கு டீசல் வழங்குமாறு கோரி வாகன சாரதிகள் வீதி மறியலில் ஈடுபட்டுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகாமையிலும், நகரின் மத்தியில் இரண்டு இடங்களிலும் கடந்த 18ஆம் திகதி முதல் சுமார் 500 பேர் வரையில் எரிபொருளுக்காக காத்திருக்கிறார்கள்.

நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு டீசல் வழங்காததைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக வாகன உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

புத்தளம்-கொழும்பு வீதியின் மதுரங்குளியிலிருந்து போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியை மூடியதாலும், மதுரங்குளி நகரில் அதிகளவான கடைகள் அடைக்கப்பட்டிருந்ததாலும் நகரம் அமைதியாக காணப்பட்டது.

புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே. எம்.ஜெயமஹா உள்ளிட்ட சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், மூடப்பட்ட வீதியை மீண்டும் திறப்பதற்கான முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

மதுரங்குளி எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு டீசல் விநியோகம் செய்யப்பட்டதன் பின்னர் வீதி திறக்கப்படும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும்பில் இருந்து கொழும்பு மற்றும் புத்தளம் நோக்கி பயணித்த பெருமளவிலான வாகனங்கள் காத்திருப்பதை காண முடிந்தது. (ஐ)

## 18 வயது யுவதி மர்ம மரணம் சகோதரியின் கணவர் கைது!

### தாக்கிக் கொன்றுவிட்டு நாடகமாடியது அம்பலம்

*வாகரை, ஏப். 02*

யுவதி ஒருவர் மர்ம மான முறையில் உயிரிழந்த சம்பவம் வாகரை யில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இந்த சம்பவம் தொடர் பில் இறந்த பெண்ணின் தமக்கையாரின் கணவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

வாகரை - பனிச் சங்கேணியில் யோகராசா திரிஷா (வயது 18) என்பவர் கடந்த மார்ச் 29ஆம் திகதி மர்மமாக உயிரிழந்த நிலையில் சடலமாக படுக்கையிலிருந்து மீட்கப்பட் டார்.

உயிரிழந்த பெண்ணின் தாய், தந்தை பிரிந்து வாழும் நிலையில் அவரின் தாயார் பணி நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளார். இந்நிலையில், அந்த யுவதி தனது இரண்டாவது தமக்கையுடன் இருந்து கல்வி கற்று வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த 28ஆம் திகதி இரவு 7 மணியளவில் உயிரிழந்த பெண் ணின் சகோதரி மூத்த சகோதரியின் வீட் டுக்கு கணவருடன் சென்றுள்ளார். அவரை அவர் பட்டா வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளார். அங்கு சென்றதும் கணவர் மீன் பிடிக்க கடலுக்கு செல்வதாகக் கூறிவிட்டு மீண்டும் வீடு திரும்பியுள்ளார்.

வீட்டில் படித்துக் கொண்டிருந்த யுவதியும் தானும் மூத்த தமக்கையின் வீட்டுக்கு அழைத்துச் செல்லுமாறு கூறியுள்ளார். அவரை அழைத்துச் சென்ற அவர், சில நிமிடங்களில் அவரை சடல மாக கொண்டுவந்துள்ளார். இரத்தக்றை படிந்த ஆடைகளை மாற்றிவிட்டு கட்டிலில் அவர் நித்திரையிலிருப்பதுபோல் ஏற்பாடு செய்துள்ளார். பின்னர் அந்த ஆடைகளையும் வீட்டிலிருந்த சி. சி. ரீ. வி. கமெராவின் வன்தட்டையும் கழற்றி மறைத்து வைத்துள்ளார்.

இந்நிலையில், இரவு 11 மணியளவில் மனைவியை மீண்டும் அழைத்து வந்துள்ளார். மனைவியிடம் சகோதரி நித்திரையாக இருக்கிறார் எழுப்ப வேண்டாம் என்று கூறிவிட்டு இருவரும் நித்திரைக்கு சென்றுள்ளனர். இந்நிலையில் தமக்கையார் சகோதரியை காலையில் எழுப்பியபோது அவர் உயிரிழந்தமை தெரியவந்தது. அவரின் வாயிலிருந்தும் இரத்தம் கசிந்திருந்தது. இதைத் தொடர்ந்து பிரேத பரிசோதனையில் யுவதி முதுகு மற்றும் தலைப் பகுதியில் தாக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. பொலிஸாரின் விசாரணையில் ஒளித்து வைக்கப்பட்ட பெண்ணின் உடைகளும், சி.சி.ரீ.வி. வன்தட்டும் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து பெண்ணின் கணவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)



## புளியந்தீவு பாலர் பாசாலையில் நேற்று சிறுவர் சந்தை நிகழ்வு

*மட்டக்களப்பு, ஏப். 01*

மட்டக்களப்பு - புளியந்தீவு குழந்தை இயேசு பாலர் பாடசாலையில் அதிபர் அருட்சகோதரி நிதர்சினி தலைமையில் சிறுவர் சந்தை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அதிதியாக மட்டக்களப்பு வலய முன்பிள்ளைப் பருவ பராமரிப்பும் அபிவிருத்திக்கும் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் முத்துராஜா புவிராஜா கலந்து கொண்டார்.

இதன்போது, பிள்ளைகள் வியாபாரிகள் போல ஆடையணிந்து பல்வேறுபட்ட பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்தனர். இங்கு பழங்கள், காய்கறிகள், இலைக்கறிகள், சிற்றுண்டி வகைகள், விளையாட்டுப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள் என பல்வகையான பொருட்கள் காணப்பட்டன. இவர்களுக்கு உதவியாக அவர்களின் பெற்றோர்களும் உடனிருந்தனர்.

சிறுவர் சந்தையை பார்வையிட பாடசாலை ஆரம்பப் பிரிவு மாணவர்களும் ஆசிரியர்களும் அங்கு சமுகமளித்திருந்தனர். மிகச் சிறப்பான முறையில் நிகழ்வை பெற்றோர்களின் பூரண ஒத்துழைப்புடன் ஒழுங்கமைத்து செயற்படுத்திய முன்பள்ளி அதிபர், ஆசிரியர்களுக்கு பலரும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE - இந்தியன்
04.30 மணி : மனிதனின் மறுபக்கம்-ஆச்சி மணோரம்மா




5.00 மணி : அந்தி மந்தாரை-நேரலை
6.00 மணி : எதுசரி எதுபிழை-ஜனாதிபதியுடனான கூட்டமைப்பின் சந்திப்பு



**இரவு**
7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு
7.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி: டான் பட்டிமன்றம்-தற்காலத்தில் சிறந்தது கூட்டுக்குடும்பமா? தனிக்குடும்பமா?




10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகசோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு